செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௪௯] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, ஆனி (July'75) [பரல்-௧௧

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சா. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சக	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦சு, ஆனி சூலை 1975	பரல் கக

தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றாண்டுப் பிறந்தநாள் விழாவும் செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழாவும்

இவ்விரு பெரு விழாக்களும் 1976 ஆவணித் திங்களில் சென்னை மாநகரில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெறுதல் வேண்டும். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் 1968 சனவரித் தொடக்கத்தில் தமிழகவரசு முன்வந்து சீரும்சிறப்புமாக நடத்தியதுபோல் மறைத்திரு மறைமலையடிகளாரின நூற்றாண்டு விழாவையுஞ் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும்.

நம் அடிகளார் ஒரு கல்விக்கடல். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளையுந் துறைபோகக் கற்ற மாபெரும் புலவர். மறைமலைபடிகளாரின் வாழ்வு தமிழ் மறுமலர்ச்சியின் வரலாறுகும். தனித்தமிழில்பேசவும் எழுதவும் முடியும் என்பதை நிறுவிக்காட்டிய பேராளர். ஒளிமங்கிக் கிடந்த தமிழ்நாட்டுக்கு ஒளியூட்டிய இளஞாயிறெனப் போற்றுதற்குரியார்.

1912க்கு மேல் அடிகளார் அளித்த சீர்திருத்தக் கருத்துக்கள் தமிழகவரசினரால் மேற்கொள்ளப்பட்டுத் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. 'இந்தி' தமிழ்நாட்டில் புகுத்தப்பெற்றபோது அடிகளார் இந்திய மொழிகளையெல்லாம் ஆய்ந்து எழுதிய 'இந்தி பொது மொழியா' என்ற நூல் இந்தி எதிர்ப்பிபக்கத்தில் ஈடுபட்டோர்கள் பேசுதற்கும் எழுதுதற்கும் உண்மைக் கருத்துக்களைத் தந்ததென்றால் அது மிகையாகாது. மேலும் அவர்களே இந்தி எதிர்ப்பு மாநாடுகளிலே தலைமை தாங்கி ஆற்றிய எழுச்சிமிக்க உரைகள் உறங்கிக்கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி வெற்றி பெறச் செய்தன. இன்றைய தமிழகவரசு அமைவதற்கு அடிகளாரும் ஓரளவு காரணராவார்.

சைதையில் திருத்தியமைத்து மிகப் பெரிதாகக் கட்டப்பெற்ற மர்மலாங் பாலத்துக்கும், பல்லவபுரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் தமிழரசு மறைமலையடிகளார் திருப்பெயரைச் சூட்டியுள்ளது. மேலும் அடிகளார் பெயரில் 'புதுநகர்' ஒன்றும் அமைக்கப்பெறுகிறது. அதன்கண் 25,000 பேர்கட்கு வீடுகள் கட்டப்பெறும் என்ற செய்தி மிக்க மகிழ்ச்சி தருகிறது. விழாவுக்கு முன் அத்திட்டம் ஓரளவு நிறைவேறின் நன்றாகும்.

அடிகளாரின் நூற்றாண்டு விழா தலைநகரில் மட்டுமல்லாமல் தமிழர் மிகுதியாக வாழும் மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடும்படி செய்தல் வேண்டும்.

முன்னமே கழகம் குறிப்பிட்டபடி சென்னைக் கடற்கரையிலுள்ள போர் நினைவுக்கல் மண்டபத்தின் தென்புறம் அடிகளார் திருவுருவச் சிலை நிறுவுதல் வேண்டும். அடிகளார் திருப்பெயரைக் கூவம் பூங்காவுக்கும் நந்தனம் அரசு கலைக்கல்லூரிக்கும் சூட்டுதல் வேண்டும்.

சென்னையில் நடைபெறும் மறைமலையடிகள் நூல்நிலையம் ஆராய்ச்சியாளர்கட்கு மேலும் மிகுபயன் தரத்தக்க வழிவகைகட்கு ஏற்பத் தமிழக அரசு வேண்டும் பொருளுதவி செய்தல் வேண்டும்.

அடிகளார் திருப்பெயர் கொண்ட அஞ்சற்றலை விழாவன்று வெளிவரவும், பல்லவபுரம் கலைமன்றம் மேலுஞ் சிறப்புற்று விளங்கவும் தமிழரசு உதவி நல்கவேண்டும்.

அடிகளார் வாழ்க்கை ஓவியமும் எழுதிய நூல்கட்குத் திறனாய்வும் கொண்ட நூற்றாண்டுமலர் ஒன்று அழகியதாக வெளியிடுதல் வேண்டும்.

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவும் செந்தமிழ்ச் செல்வி ஐம்பதாண்டு பொன்விழாவும ஒரேகாலத்தில் நிகழவிருக்கின்றன என்பது திருவருட் செயலே யாகும்.

செந்தமிழ்ச் செல்வி தமிழ், தமிழ்இனம், தமிழ்நாடு ஆகிய மூன்றின் முன்னேற்றங் கருதி மேற்கொண்ட குறிக்கோளினின்றும் ஒரு சிறிதும் விலகாமல் தொண்டு செய்து வருகிறது. அது தமிழ் நாட்டுக் கலைக்களஞ்சிய மாகவும். வரலாற்றுக் களஞ்சிய மாகவும் மிளிர்கின்றது. பேரருளாளர்கள், பெரும்புலவர்கள, பலதுறைகளிலுள்ள பெருமக்கள் உருவப்படங்களும் திருக்கோயிற் படங்களும் அடங்கிய செருகேடு (album) ஆக விளங்குகிறது.

அதன் பொன்விழா மலரின்கண் இலக்கண இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், அறிவியல் கருத்துக்கள், பெருவிழாக்கள் பற்றிய பலவேறு நிகழ்ச்சிக் குறிப்புக்கள் முதலியன அகரவரிசையில் அடைவு செய்து வெளியிடப்பெறும். தமிழகத்திற்குப் பயன்படுமாறு அறிஞர் பெருமக்கள் எழுதுங் கட்டுரைகளும் வாழ்த்துக்களும் அதன்கண் இடம்பெறும்.

வ. சு.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[6]—துளைத்தற் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

பகு—பக்கு=1. பிளப்பு (W.). 2. கவர் படுகை. "தங் கள்ளத்தாற் பக்கான பரி சொழிந்து" (தேவா. 17 : 3). 3. பை "பக்கழித்துக் கொண்டீயெனத்தரலும்" (கலித். 65 : 14). 4. மரப்பட்டை. (W.). 5. புண்ணின் அசறு. (W.). 6. பல்லின் பற்று (W.). "காய்ந்துபோன மூக்குச் சளி" (W.). சோற்றுப் பொருக்கு. (W.).

பக்கு (அசறு —தெ. பக்கு.

பக்கு (பை)—ஒ. நோ : ME *bagge*, E. *bag*, ON baggi. OF bague, Pr. bagua (baggage), med. L. *baga* (sack).

பக்கெனல்=வெடித்தற் குறிப்பு.

பக்கிடுதல்=வெடித்தல்.

பக்கிசைத்தல்=1. விட்டிசைத்தல். 2. வேறு படுத்திக் கூறுதல். "அதுவும் இதுவும் எனப் பக்கிசைத் தோதப்பட்ட" (சி. போ. சிற். 12 : 4 உரை).

பக்கு விடுதல்=1. பிளத்தல். "கரவென்னும் பார்தாக்கப் பக்குவிடும்" (குறள். 1068). 2. தோலறுதல். (W).

பக்கு—பக்கறை=1. பை. 2. துணியுறை. "ஏந்து வெள்ளைப் பக்கறை" (விறலிவிடு). 3. குழப்பம். (யாழ். அக).

பகு—பக்கம்=1. மருங்கு (side.) "பக்க நோக்கி நிற்கும்" (திவ். திருவாய். 5 : 5 : 5). 2. அருகு. (சூடா.). 3. இடம். "ஊழையும் உப்பக்கங் காண்பர்" (குறள். 620). 4. விலாப்புறம். 5. சிறகு. "இசைபடு பக்க மிருபாலுங் கோலி" (பரிபா. 21 : 31). 6. அம்பிறகு. 7. பொத்தகத்தின் ஒரு புறம். 8. பொத்தகம், நூல். "வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு" (தொல். அகத். 41). 9. பிறைக்கூறு. 10. பிறை நாள் (திதி). 11. வளர்பிறை அல்லது தேய் பிறைக்காலம். "பகலிராப் பக்கமே திங்கள்" (காஞ்சிப்பு. காயாரோகண. 2). 12. நட்பு. 13. அன்பு. 14. சுற்றம் "பக்கஞ் சூழ வடமீன் காட்டி" (கல்லா. 18). 15. சரவடி, வழிமரபு 16. சேனை. "தாவரும் பக்க மெண்ணிரு கோடி யின் தலைவன்" (கம்பரா. இலங்கைக் கேள்வி. 40). 17. தொழிற் றெகுதி. "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல்.

புறத். 20). 18. கோட்பாடு. 19. தன்மை. "வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று" (நாலடி. 258). 20. ஏரண மேற்கோள். "பக்க மிம்மலை நெருப்புடைத் தென்றல்" (மணி. 29 : 59). 21. துணி பொருளுள்ள விடம். "பக்கந் துணி பொருளுக் கிடமாம்" (சி. சி. அளவை. 9.) 22. மறுதலையுய்த் துணர்வு (அருத்தாபத்தி). 23. நாடு.

பக்கம்—வ. பக்ஷ. ஒ. நோ : *L. pagus*, country district.

பக்கம்—பக்கல்=1. பக்கம். "என் பக்கலுண்டாகில்" (பெரியபு. இயற்பகை. 7). 2. இனம். (W). 3. மாதநாள் (தேதி).

பக்கு—பங்கு=1. பாகம். "பங்குலவு கோதையுந் தானும்" (திருவாச. 16 : 9). 2. பாதி. (சூடா). 3. கூறு. 4. பக்கம். என் பங்கில் தெய்வம் இருக்கிறது. (உ. வ.). 5. இரண்டு அல்லது இரண்டரைச் செறு (ஏக்கர்) நன்செயும் பதினாறு செறு (ஏக்கர்) புன்செயுங் கொண்ட நிலம். (C. G. 288). ம. பங்கு.

பங்கு—பங்கிடு. பங்கிடுதல்=1. பகுத்துக் கொடுத்தல். 2. பாகம் பிரித்தல்.

பங்கு—பங்கன்=தன் பாகமாகக் கொண்டவன். "மங்கை பங்கனை மாசிலா மணியை" (தேவா. 549 : 5.)

பங்கு—பங்காளி=1. தொழிற் கூட்டாளி. 2. தாயத்தான்.

பங்குக்காரன்=பங்கிற் குரியவன்.

பங்கு—பங்கம்=1. பங்கு. "பங்கஞ் செய்த மடவாளொடு" (தேவா. 855 : 5) 2. பிரிவு. "பங்கம் படவிரண்டு கால் பரப்பி" (தனிப்பாடல்). 3. துண்டு. 4. கேடு. "அற்பங்க முறவரு மருணன் செம்மலை" (கம்பரா. சடாயு. 8.).

பங்கு—பங்கி=1. பாகமாகப் பெற்றுக் கொள்பவன். "நஞ்சினைப் பங்கியுண்ட தோர் தெய்வ முண்டோ" (தேவா. 392 : 6). 2. ஆருண்டிற் கொருமுறை சீட்டுப் போட்டுச் சிற்றூர் நிலத்தைச் சிற்றூரார்க்குக் கொடுக்கும் பற்றடைப்பு முறை. (W. G.).

முப்பங்கி (திரிபங்கி), பதின்பங்கி (தசபங்கி), நூற்றுப் பங்கி அல்லது பதிற்றுப் பதின்பங்கி (சதபங்கி) என்பன, ஒரே பா அல்லது பாவினம் முறையே மூவேறு பான்வேறு பதிற்றுப் பான் வேறு பா அல்லது பாவினமாகப் பிரிந்து, வெவ்வேறு பொருள்படுமாறு பாடப்படும் சொல்லணிச் செய்யுள் வகைகள்.

திரிபங்கி (முப்பங்கி) என்பது. மூவளைவாக உடம்பை வளைத்து நிற்கும் நிலையையுங் குறிக்கும். "வெள்கிய திரிபங்கி யுடன்" (அழகர்கலம். 1 .

பகு—பகுப்பு=பிரிப்பு. "பகுப்பாற் பயனற்று" (நன், 131).

பகு—வகு—வகுப்பு=1. கூறுபடுத்துகை. 2. இனம் பற்றிப் பிரிக்கை. "வகுப்பமைந்த............அப்பங்கள்" (மதுரைக். 626, உரை). 3. உச்சிவகிடு. "சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழன் முடித்து" (கூளப்ப. 131). 4. பிரிவு. 5. தடுக்கப்பட்ட அறை. 6. குலம். 7. தரம். 8. பொலிவு. 9. அழகு. 10 செய்யுளிசை யொழுக்கு. "மங்கல வள்ளை வகுப்பொடு" (வச்சணந். செய்யு. 32).

பகு—பகுதி=1. பகுப்பு. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்." (திருவாச. 3 : 1). 2. கூறு. 3. நூற்பிரிவு அல்லது இதழ்ப் பிரிவு. 4. வேறுபாடு. "மயங்கிய தகுதி அல்லது பகுதியின் றெனின்" (ஞானா. 35 : 5). 5. திறை. "இது பகுதி கொள்கெனு" (அரிச். பு. நகர்நீ. 111). 6. வருவாய. (சூடா.). 7. வரி. 8. பாதி.

பகுதி (திறை)—தெ. பகிதி (g), க. பகதி (g).

பகுதி—பாதி=1. சரிசமமாகப் பகுக்கப்பட்ட பொருட் பகுதி யிரண்டுள் ஒன்று. "பாதிப் பெண்ணொரு பாகத்தன்" (தேவா. 479 : 3). 2. அரைப் பகுதியளவான நடு. "பாதி வழியின் மிண்டி" (காஞ்சிப்பு. சிவாத். 28).

வகு—வகுதி=வகுப்பு. "வகுதியின் வசத்தன" (கம்பரா. இரணியன். 69).

பகு—பகம்=பிளவு.

பகு—பகவு=1. பிளவு. 2. வெடிப்பு. (யாழ். அக.). 3. பங்கு. (யாழ். அக.). 4. துண்டு, துணிக்கை. "எட்பகவன்ன சிறுமைத்தே யாயினும்" (குறள். 889). 5. பகுப்பு.

பகவு—பகவன்=எல்லா வுயிர்கட்கும் உணவைப் பகுத் தளிக்கும் இறைவன். 2. சிவன். (தி. வா.) 3. திருமால். (பிங்.). 4. தெய்வமாக வணங்கப்படும் கதிரவன். (பிங்.). 5. ஆசியத் தெய்வமாகிய பிரமன். (பிங்.). 6. சமணர்க்குத் தேவன் போன்ற அருகன். (திவா). 7. புத்த நெறியார்க்குத் தேவன் போன்ற புத்தன். (திவா.). 8. இறைவனிடத்திற்கு வழி காட்டும் மதக்குரு. (பிங்.). 9. இறைவனடியாரும் முற்றத் துறந்த முழு முனிவரும். "பத்தர்களும் பகவர்களும்" (திவ். பெரியாழ். 4 : 9 : 6).

திருக்கோவில்களிலும் மடங்களிலும் பண்ணையாரிடத்தும் வேலை செய்வார்க்கெல்லாம், சம்பளமாக நெல்லை அளந்து கொடுப்பதே பண்டை நாள் வழக்கம். அது படியளத்தல் என்று சொல்லப்படும். அதனால், வேலையிலமர்த்தி வாழ்க்கைக்கு வேண்டும் சம்பளம் கொடுப்பார்க் கெல்லாம், படியளப்பார் என்னும் பெயர் உண்டாயிற்று. எல்லா வுயிர்கட்கும் உணவைப் பகுத்தளிப்பவன் என்னுங் கருத்தில் இறைவனும் படியளப்பான் எனப்பட்டான். ''நமக்குப் படியளப்பார் நாரியோர் பாகர்'' (தனிப்பா. i, 121 : 5).

எல்லாம்வல்ல ஒரு தனி இறைவனுக்குரிய பகவன் என்னும் பெயர், சிறு தெய்வங்கட்கும் சிறந்த மக்கட்கும் நாளடைவில் வழங்கத் தலைப்பட்டு விட்டதனால், திருவள்ளுவர் தம் திருக்குறட் கடவுள் வாழ்த்தில், முழு முதற்கடவுளைக் குறிக்க ஆதிபகவன் என்று அடை கொடுத்துக் கூற வேண்டியதாயிற்று. ஆதி என்பது முதல் என்று பொருள்படும் வட நாட்டுச் சொல். அது முந்து திரவிடமாகிய பிராகிருதச் சொல்லாயிருக்கலாம். ஆதிபகவன் என்றது, ஆதியென்னும் புலைச்சியை மணந்த ஒரு பிராமணனை எனின், ஆதி சங்கராச்சாரியார் என்பதும் ஆதி யென்னும் புலைச்சியை மணந்த சங்கராச்சாரியாரை என்று கூறல் வேண்டும். அது பொருளன்மை அறிக.

கார்காலம், முரசுகட்டில், கோவூர் கிழார் என்பன போல, ஆதிபகவன் என்பதும் வலிமிகாது வழங்கிய ஒருசில புணர்ச் சொற்களுள் ஒன்றாகும். அதனால், ஆதி யென்பது வடசொல் (சமற்கிருதச் சொல்) என்று கொள்ள வேண்டியதில்லை. மேலை யாரிய மொழிகளுள் ஒன்றிலும் ஆதி என்னுஞ் சொல்லின்மை யின், அது வட சொல்லாகாது.

வழக்கற்றுப் போன கீழையாரியமும் பிராகிருதமுங் கலந்ததே வேதமொழி என்றும், வேத மொழியுந் தமிழுங் கலந்ததே சமற்கிருதம் என்றும், அவ்விரண்டுந் தேவ மொழி யென்னும் ஏமாற்று இக் காலத்துச் செல்லாதென்றும், தமிழர் உண்மை அறிந்து தெளிக.

பகவன்—வ. பகவான் (bhagavan).

பகு பகல்=1. பகுக்கை. (பிங்). ''நெருநைப் பகலிடங் கண்ணி'' (புறம். 249). 2. (ஒரு பொருள் இரு சமப்பாகமாகப் பகும்) நடு. திவா.). 3. நடுவு நிலைமை. ''அகல்வையத்துப் பகலாற்றி'' (பதிற்றுப். 90 : 9). 4. நடு நுகத்தாணி. ''நெடு நுகத்துப் பகல்போல'' (பட்டினப். 206). 5. இருநாழிகை கொண்ட முழுத்தம் (முகூர்த்தம்). ''ஒரு பகல் காறு நின்றான்'' (சீவக. 2200). 6. நண்பகல், உச்சிவேளை. 7. நள்ளிருள். ''அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்'' (சிலப். 4 : 81).

8. காலை முதல் மாலை வரையுள்ள காலம். ''பகல் விளங்குதியாற் பல்கதிர் விரித்தே'' (புறம். 8). 9. அறுபது நாழிகை கொண்ட நாள். ''ஒல்வ கொடாது தொழிந்த பகலும்'' (நாலடி. 169). 10. கதிரவன். ''பனமலர்ப் பூம்பொழிற் பகன் முளைத்தது போல்'' (மணி. 4 : 92). 11. ஒளி விளக்கம். (திவா.).

பகல்—பகர். பகர்தல்=ஒளி விடுதல். ''பக்கங் கருஞ்சிறுப் பாறைமீதே யருவிகள் பகர்ந்தனைய (திவ். பெரியாழ். 1 : 7 : 8).

பகர்=ஒளி. ''சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்செய் திருவேங்கடத்தானே'' (திவ். திருவாய். 6 : 10 : 9).

பகல்—பால். 1. பிரித்துக் கொடுக்கை. ''பாலுங் கொளாலும் வல்லோய்.'' (பதிற்றுப். 16 : 19). 2. பகுதி ''அறையென வரூஉம் பால்வரை கிளவிக்கு'' (தொல். தொகை. 23). 3. பாதி. ''பானுளிரவில்'' (கலித். 90). 4. பக்கம். ''ஒருபாற் கோடாமை'' (குறள். 118). 5. தொழில் வகுப்பு. ''வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்'' (புறம். 183). 6. இடையர் குறும்பர் குல உட்பிரிவு. (E. T. V. 450). 7. திசை. (பிங்.). 8. இடம். (யாழ். அக.). 9. குணம் (பிங்.). 10. இயல்பு. (பிங்). 11. உயிர்கட்கு அவற்றின் வினைக்கேற்ற இன்ப துன்பம் வகுக்கும் ஊழ். 12. ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் இலக்கண ஐம்பாற் பிரிவு. ''இருதிணை மருங்கின் ஐம்பால்'' (தொல். கிளவி. 10).

க. பால், தெ. பாலு.

பால்—பான்மை=1. பகுதி. ''தேவர் பான்மை யிற்றென்று'' (சீவக. 553). 2. குணம். 'சொல்லிய பான்மையாகி'' (தாயு. பொருள்வ. 12). 3. தகுதி ''நற்றவம் ....பயின்ற பான்மையான்'' (கம்பரா. தாடகை. 23). 4. முறைமை. ''பான்மையிற் பிணித்து'' (மணி. 18 : 110). 5. சிறப்பு. ''பரசிரா மேச்சரத்தின் பான்மை சொல்வாம்'' (காஞ்சிப்பு. பரசிரா. 1). 6. நல்வினைப் பயன். ''புருவத்தாட்கு வந்தடை பான்மை'' (சீவக. 539).

பகு—பகிர். பகிர்தல் (செ. குன்ருவி.) 1. பிளத்தல். 2. பங்கிடுதல். ''பொற்பு மிக்க மாயன் பகிரு மமிர்தந்தனை'' (கந்தபு. மகாசாத். 20)

(செ. கு. வி.) பிரிதல் ''பரதனு மிளவலு மொருநொடி பகிராது'' (கம்பரா. திருவவ. 131).

பகிர்=1. பங்கு. ''கௌசலை கரத்தினோர் பகிர் தாமுற வளித்தனன்'' (கம்பரா. திருவவ. 89). 2. துண்டம். ''திங்களின் பகிர்புரை.......எயிறு'' (திருவிளை. நாகமெய்த. 15). 3. வெடியுப்பு. (யாழ். அக.).

பகிர்—வகிர்=1. பிளவு. 2. கீறு. (W.). 3. பிளந்த துண்டு. "மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்" (திருவாச. 9:2). 4. உச்சியெடுப்பு. "வார்ந்த நெடுங்கூந்தல் வகிரினுள்" (வெங்கையு. 304). 5. தோல்வார். (யாழ். அக.). 6. வார்க்கச்சு. (W.). 7. நரம்பு. (யாழ். அக.). 8. வழி. (பிங்.).

வகிர்தல்=1. வகிரெடுத்தல். 2. கீறுதல். "பகிர்ந்தான் சில வகிர்ந்தான்" (கம்பரா. அதிகாய. 160). 3. கோதுதல். (சது.). 4. பிளத்தல். (சது.). 5. துண்டாக அறுத்தல். (சது.). 6. பங்கு செய்தல். (சது.).

வகிர்—வகிடு=உச்சியெடுப்பு.

பகு—பகை. பகைத்தல்=1. வெறுத்தல். 2. அழிக்கக் கருதுதல்.

பகை=1. வெறுப்பு. 2. எதிர்ப்பு "(பகையென்னும் பண்பி லதனை" (குறள். 871). 3. பகைவன். "உறுபகை யூக்க மழிப்ப தரண்" (குறள். 744). 4. மாறு, மாறுபாடு. "நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்" (ஐங்குறு. 187). 5. தீங்கு. "எவன்கொல் யான் மாலைக்குச் செய்த பகை" (குறள். 1225). 6. இசைமுரண், யாழில் நின்ற நரம்பிற்கு மூன்றாவதாயும் ஆறாவதாயுமுள்ள பகை நரம்பு. "வெம்பகை நரம்பினென்கைச் செலுத்தியது" (மணி. 4 : 70). 7. கொல்லும் உயிரி, பாம்பிற்குக் கீரி பகை. (உ. வ.). 8. நோய் மருந்து. பித்தத்திற்குப் பகை இஞ்சி. (உ. வ.). 9. காமம், சினம் முதலிய ஆறு அகப்பகைக் குணம்.

ம. பக, தெ., க. பக (g).

பகு—பாகு=1. பகுதி. (W.). 2. பாகம். 3. பக்கம். 4. இரப்போர்க்கிடும் பகுதியாகிய ஐயம் (பிச்சை). "பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கி" (தேவா. 54 : 4). 5. சிவன்பாகமாகிய சிவை. (அக. நி.). 6. குளக்கரை. (அக. நி.). 7. அழகு. "பாகா ரிஞ்சிப் பொன்மதில்" (கம்பரா. ஊர்தே. 82). 8. தோள்.

பாகு—வாகு=1. பக்கம். 2. தோள். (பிங்.). "வாகுப் பிறங்கல்" (இரகு. கடிம. 64). 3. ஒழுங்கு. "வாகா நியாய வட்டி வாங்காமல்" (பணவிடு. 238) 4. அழகு. (சூடா.). "வாகா ரிபமினுள்" (திருப்பு. 135). 5. ஒளி. "இந்து வாகை" (திருப்பு. 399). 6. திறமை. "வாகுபெறு தேர் வல்லனை" (கந்தபு. மூன்றாம். யுத். 70). 7. தொட்டால் வாடி. (அரு. அக.).

ம. வாகு, தெ. பாகு (bhagu), து. வாக (g).

வாகுபுரி=தோள்வளை. "வாகுபுரி வயங்க" (காளத். உலா. 151).

வாகு வளையம்—வ. பாகுவலய (b).

பாகு—பாகம்=1. பகுக்கை. (சூடா.). 2. பக்கம். "பாகம் பெண்ணுேடாயின பரிசும்" (திருவாச. 2 : 78). 3. கூறு. "தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பன்று" (திருவாச. 5 : 37). 4. பாதி. (சூடா.). 5. பாகை. 6. ஐயம் (பிச்சை). 7. பங்கம் "பாகத்தைப் படாத நெஞ்சின்" (சீவக. 2278, உரை). 8. பறைவகை. (சிலப். 3 : 27, உரை).

பாகம்—வ. பாக (bhaga).

பாகு—பாகி. பாகித்தல்=பங்கிடுதல்.

திரிபாகி (முப்பாகி)=மூவெழுத்துக்கள் கொண்ட ஒரு சொல், அதன் முதலெழுத்தையும் இறுதி யெழுத்தையுஞ் சேர்க்க மற்ருெரு சொல்லாகியும், இடையெழுத்தையும் கடை யெழுத்தையுஞ் சேர்க்க மற்றுமொரு சொல்லாகியும் வந்து, வெவ்வேறு பொருள் தருமாறு பாடப்படும் சொல்லணி. (தண்டி).

இது முப்பாகியென்றிருத்தல் வேண்டும். திரி என்னும் வடமொழி எண்ணுப் பெயர், முப்புரியாகத் திரிக்கப்படும் நூல் அல்லது கயிறு என்னுங் கருத்தினின்றும் தோன்றியிருக்கலாம். ஏக என்னும் வடமொழி முதலெண்ணுப் பெயர், ஒக்க என்னும் தெலுங்குச் சொல்லினின்று தோன்றியிருத்தல் காண்க.

ஒக்க—எக்க—ஏக.

வடமொழியில் எகரக் குறிலின்மையால், எக்க என்பது ஏக (ஏக்க) என நீண்டது.

பாகு-பாகன்=1. பக்கத்திலிருந்து பேணுபவன். 2. யானைப்பாகன். "யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" (நாலடி. 213). 3. வாதுவன் (குதிரைப் பாகன்). 4. தேரோட்டி. "தேரிற் பாகனு யூர்ந்த தேவதேவன்" (திவ். பெரியதி. 7 : 5 : 2). 5. அறிவன். (புதன்) (சூடா).

ம. பாவான், மரா. பாகா (g).

பாகன்—பாகு=1. யானைப்பாகன் "பாகு கழிந்தியாங் கணும் பறைபட வரூஉம் வேக யானை" (சிலப். 15 : 46). 2. நடாத்துந் திறன். "போர்ப் பாகு தான் செய்து" (திவ். திரு வாய். 4 : 6 : 3).

பாகம்—பாகன்=ஒரு பாகமாகக் கொண்டவன் "நாரி பாகன்" (தேவா. 1172 : 9).

பாகு—பாக்கு=1 பகுதி அல்லது பக்கம். 2. எதிர்கால வினையெச்ச ஈறு, உண்பாக்கு வந்தான். (இ. வ.). "வான்பான் பாக்கின வினையெச்சம்" (நன். 243). 3. தொழிற்பெயரீறு. "அஞ்சுதும் வேபாக் கறிந்து" (குறள். 1128).

பாக்கு—வாக்கு=1. பக்கம். "இரண்டு கைவாக்கு மியங் கலிப்ப" (திருவிளை. தடாதகை 26). 2. இயங்கும் திசை. காயப்போட்ட துணி காற்று வாக்கிற் பறந்துவிட்டது. (உ. வ.). 3 ஒரு வினையெச்ச ஈறு. "கொள்வாக்கு வந்தான்" (தொல். சொல். 231, உரை).

பாக்கு-பாக்கம்=1. நெய்தல் நகரப்பகுதி. எ—டு: பட்டினப் பாக்கம், மருவூர்ப் பாக்கம். (காவிரிப்பூம் பட்டினப் பகுதிகள்). 2. நெய்தல் நிலத்தூர். "கொழும் பல்குடிச் செழும் பாக்கத்து" (பட்டினப். 27). 3. ஊர். "கட்கொண்டிக் குடிப் பாக்கத்து" (மதுரைக். 137), காவேரிப் பாக்கம். 4. அரசனிருப்பு. (பதிற்றுப். 13 : 12, உரை).

பாக்கு—பாக்கை=1. நெய்தல் நிலத்தூர். "நென்னலிப் பாக்கை வந்து" (பதினொ திருவே. திருவந். 74). 2. ஊர். எ—டு. கொள்ளிப் பாக்கை.

பாக்கம்—வாக்கம்=1. நெய்தல் நிலத்தூர் எ—டு: கத்திவாக்கம். 2. ஊர். எ—டு. வில்லிவாக்கம்.

பாக்கு—பாங்கு=1. பக்கம். "காடு கொண்டலர்ந்த பாங்கெலாம்" (சூளா. நாட். 2). 2. உரிய இடம். "பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" (மணி. 1 : 61). 3. இன்கண் (பட்சம்). "வேந்த னொருவற்குப் பாங்கு படினும்" (யாப். வி. 96) 4. இணக்கம். (W.). 5. துணையான—வன்—வள். "வேல்விடலை பாங்கா" (திணைமாலை. 87). 6. தோழமை. "நீயும் பாங்கல்லை" (திவ். திருவாய். 5 : 4. 2). 7. ஒப்பு. "பாங்கருஞ் சிறப்பின்" (தொல். புறத். 23) 8. நன்மை. "பாங்கலா நெறி" (வாயுசங். இருடி. பிரம. 11). 9. அழகு. "பாங்தறக் கூடும் பதி". (பு. வெ 9 : 51, கொளு). 10. தகுதி. "பாங்குற வுணர்தல்" (தொல். உரி. 100). 11. இயல்பு. (W.). 12. ஒழுக்கம். "பாங்குடையீர்" (திருவாச. 7 : 3).

ஒ. நோ : போக்கு—போங்கு.

பாங்கு—பாங்கன்=1. தோழன். "பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப" (தொல். கள. 13). 2. கணவன். "பொருள்வயிற் பாங்கனர் சென்ற நெறி" (நாலடி. 400). 3. உழையன்.

ம. பாங்ஙன். ஒ. நோ : *ME*, *OF*, *It. paggis*, E *page*.

பாங்கன்—பாங்கி = தலைவியின் தோழி. "பாங்கியிற் கூட்டம்" (நம்பியகப். அகத். 27).

பாகு—பாகை=1. பகுதி. (சூடா). 2. (கணக்கு) வட்டத்தை முந்நூற்றறுபதாகப் பகுத்து வந்த பகுதி. (யாழ். அக.). 3. கால அளவு வகை. (W.). 4. வெப்பமானியின் அல்லது கண்ணாடிக் குப்பியின் அளவு வரை (degree).

———

(தொடர்ச்சி)

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஏழாவது மாநாடும், கருத்தரங்கும்

டாக்டர். பா. நடராசன் ஆற்றிய தலைமையுரை

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது மாநாட்டின் கருத்தரங்குத் தொடக்கவிழாவுக்குத் தலைமை தாங்குவதற்கு எவ்வகையில் பொருத்தமுடையேன் என்பதனை என்னால் எண்ணியறிய முடியவில்லை.

தமிழ்நாட்டில், தமிழிலக்கியத்தில், காலந்தோறுமுள்ள தமிழ்மக்கள் வாழ்வோடு, பண்பாட்டோடு தொடர்புடைய பொருளாதாரத்தை அறிந்துகொள்வதற்கு என்போன்றோர் உதவிதான் இனித் தேவை என்பது கருதப்படலாகும். அதுவன்றித் தமிழ் இலக்கியத்தில் பாட்டின் பொருளை மட்டிலும் காணல் போதாது; வாழ்வின் பொருளாதாரத்தினையும் காணலே இனிச் செய்யும் செயலாகும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கலாம். இலக்கியங்கற்றுச் சுவையால் உணர்வடைதல் மட்டும் போதாது; வாழ்வில் தளர்வடையாதிருத்தல் வேண்டின் அறிவியல் முறையில் பொருளியல் நிலையினையும் தெரிந்தால்தான் இனித் தமிழ்மொழியின், இலக்கியத்தின் வாழ்வு எனப் புதிய எண்ணத்தைக் கொண்டுள்ளமையும் எண்ணியுணர்தற்குரியதாகும்.

ஏழு என்பது ஒரு நல்ல எண்ணாகும். அதிலும் ஏழாவது மாநாடு தென்குமரியாகிய தமிழ்நாட்டின் தென் பகுதியில், முக்கடலும் கூடுகின்ற முனைப்பகுதியில் முத்தமிழின் மாநாடு மூன்று நாள் கூடுகின்றதெனின் இதன் பெருமையினை யான் சொல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டில் எம்மாவட்டத்திற்குமில்லாத தெய்வத்தாயின் பெயர்கொண்ட குமரிமாவட்டத்தில், நாஞ்சில் எனும் ஏரால் பேர்பெற்ற எழிலுடை நாட்டில் நடப்பது, இம் மாநாட்டின் சிறப்பாகும்.

பாலையில்லாத நானிலமாகத் தோன்றும் நாஞ்சில் நாடு குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் அடுத்தடுத்துக் காணப்படுவதால் திணை மயக்கத்தை எளிதில் தெரிந்து கொள்ளும் நிலம் என்பதனைத் தமிழ் நாடகத்தில் தலைசிறந்த மனோன்மணீயமே சான்றாய்க் கூறுமல்லவா? இத்தகைய நாஞ்சில் நாட்டுக்குத்தானே, பலகால் சேர, சோழ, பாண்டியப் போர். இறுதியில் மூவரும் ஒன்றுபட்டதனையுணர்த்தும் முப்பந்தல் என்னும் ஆரைவாய்மொழிக் கீழ்ப்புலப்பகுதியும் இங்குத்தானேயுள்ளது?

குலசேகரபுரம், இரவிபுதூர், சேந்தன்புதூர் என்பன பழமன்னர் பெயர்கொண்ட ஊர்களே.

பூதப்பாண்டி, அழகியபாண்டிபுரம் என்னும் ஊர்ப்பெயர் களும் பழைய சங்ககாலப் பாண்டியர்களை உணர்த்துமல்லவா? சோழபுரம் என்பதும் பிறவும் அவை போன்று சோழமன்னர் பெயரையே யுணர்த்துவன. நாஞ்சில் வள்ளுவன் ஆண்டதும் இப் பகுதியே. ஔவைக்கு அரும்பொருளீந்தது புறப்பாட்டில் மட்டுமன்று; இங்குள்ள ஔவையா ரம்மன்கோவிலு முணர்த் தும் நாஞ்சில் மலையும் நாஞ்சில் நாட்டின் வடமலையேயாகும்.

தமிழ் சொல்லும் வேள் நாடும் (வேணுடு) இதுவே. தொல் காப்பியரது ஒரு வகுப்பு மாணவராயிருந்து தொல்காப்பியம் அரங்கேறத் தலைமைதாங்கிய அதங்கோட்டாசானும் இப்பகுதி யினரே என்பதனை அதங்கோடு எனும் ஊரேயுணர்த்தும்.

அன்று தொடங்கி இன்று வரை தமிழ் தழைத்தோங்கிய இடம் இது. வேணாட்டடிகள், மனோன்மணீயத்தின் கரு, கவிமணி, கே. என். சிவராசபிள்ளை, வையாபுரிபிள்ளை, இசைப் புலவர் இலக்குமணபிள்ளை, சதாவதானி செய்குதம்பிப் பாவலர், தக்கலை பீ ருமுகமது சாகிப், ஜீவா, நாடகத்திற்கு. டி. கே. எஸ். சகோதரர்கள், என். எஸ். கிருஷ்ணன் போன்றோர் தோன்றிய சிறந்த பகுதியும் இதுவேயாகும்.

இப் பகுதியின் பெருமையினைக் கி. மு. விலேயே கொம்ரிய அக்ரன் (குமரி), கொத்தியாரா (கோட்டாறு) எனக் கிரேக்கப் பேரறிஞர்களாகிய பிளினி, தாலமி குறிப்பிட்டுச் சென்ற பழம் பெருமையுடையது. "கோட்டாறும் தென்னுறும் புகையால் மூட" என்று கலிங்கத்துப்பரணி கூறும் பழைய பெருவாணிப இடமும் இதுவேயாகும்.

மக்கள் முதலில் தோன்றிய இடமென்றும், தமிழ்நாட்டின் முற்பகுதி என்றும், கூறும் மறைந்த நாடுகள் இதன் தென்பா லுள்ளன. தென்புலம் என்பதனைப் "பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்பதனால் அறியலாம்.

வங்கத்துச் சிங்கமாகிய விவேகானந்தரும் தலங்கண்டு தவம்கொண்டு தனித்துயர்ந்த நீர் நிலமே குமரித் துறைநிலம். இந் நிலத்துத், தாய்த் தமிழ் நிலத்து ஏழிசையும், எழுகடலும் போன்ற ஏழாவது தமிழ் மாநாடு எழுச்சிபெறும் என்பதில் ஐயமில்லை.

கூடியிருக்கும் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள் பழைமையில் ஒவ்வொரு புறமிருந்து வேறுவேறு செல்ல, இன்று இந்தியா முழுமையிலுமிருந்து ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று உணர்ந்து கூடியது வளர்ந்து வாழ்வதற்கு அறிகுறி யாகும். இவர்கள் ஒவ்வொருவரும் மொழி, இலக்கியம் பற்றி

ஆய்ந்த கட்டுரைகளைக் கொணர்ந்து பலர்முன் அரங்கேற்றி வழக்காடி முடிவு காண்பதும், புதிய முறையில் ஆய்வுக் கட்டுரைகளை நூலாக்கி நூலகந்தோறும் பரவ வைப்பதும், எண்ணமும் தமிழ்க் கலையும் வளர்ந்து நிலைபெற வழியாகும். வாயுணவே வாழ்வில்லை; செவியுணர்வும், நாநலமும், நூல் வடிவும் நுண்ணிதாகப் பெறுதலே சிறந்த வாழ்வெனக் கொள்வது சீரிய நோக்காகும். மரத்தின் கிளைபோன்று தமிழைப் பலநிலையில் ஆராய்வது மரவளர்ச்சிபோன்ற பசுமை மன வளர்ச்சியாகும்.

இவர்கள் ஆய்வு பழைமையில்மட்டும் நின்றுவிடாதபடி விரைந்து வளரும் எதிர்கால வாழ்வையும் நோக்கியதாயிருப்பின் அதுவே எழுஞாயிற்றின் கதிர்நோக்காக இருக்கும். வாழ்வும் புதிது; கலையும் புதிதாக வளர்ந்துவரும் காலச்சூழலுக்குத் தக்கவாறு தமிழ்க் கல்வியையும் அமைத்துக் கொள்ளும் உள் ளுணர்வும் உடைத்தாக இருத்தல் வேண்டும் செய்யும் ஆராய்ச்சிகள்.

ஆய்வுக் கட்டுரைகள் ஒரு புதிரை நீக்கும் வகையில், புதுப் பார்வை கொண்டு, புதுக்கருத்து ஒன்றேனும் கொண்டு அறிவுக்கு விருந்தாக, வகையாக இருப்பின் அதுவே ஆய் வாகும். ஏதோ எழுத வேண்டும் என்றில்லாதபடி, எண்ணத்தை உருப்படுத்தி எழுதின் அது நல்லவண்ணமாகும் என்பதனை யாரும் ஒப்புக்கொள்வர். உளங்கொண்ட ஆய்வே வளங்கொள்ளும்.

தமிழ் நாட்டில் தமிழ் ஆசிரியர் செய்யும் பணியைக் காட்டிலும், பிற மாநிலங்களில், நாடுகளில் தமிழ்ப்பணி செய்யும் நல்லறிஞர் தொண்டு பெருந்தொண்டாக இருத்தல் வேண்டும். இருபகுதி மக்களை இணைக்கும் ஒருபாலத்தைச் சுட்டுகின்ற பாணியாக அவர்கள் தொண்டு அமையவேண்டும். கங்கைக்கரை யமர்ந்து உருது கற்று தமிழைப் பரப்பிய குமர குருபரர் வாழ்வு நமக்குப் பாடமாக வேண்டும். மொழியால், கலையால், பண்பால், தமிழ்ச் செல்வத்தை அவர்க்களித்து அப் பகுதிச் செல்வத்தை நாம் கொள்ளும் பண்டமாற்று வணிகர்களா யிருத்தல் வேண்டும். இருதயம் இரத்தத்தால் உடம்பு முற்றிலும் தொடர்பு வைத்துக்கொள்வதுபோல் அவர்கள் தாமிருக்கும் நாட்டின் பகுதியிலுள்ள எல்லா நிறுவனங்களோடும் தொடர்பு வைத்துக்கொள்ளல் வேண்டும். ஆங்கிலமொழி வளத்துக்குக் காரணம் பிறமொழிக் கலையை மொழிபெயர்த்தல், தழுவிஎழுதல் என்பனவாகும். அதுபோலச் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! கலைச்செல்வங்களெல்லாம் . கொணர்ந்திங்குச் - சேர்ப்பீர்"

என்பதற்கிணங்க மொழி பெயர்ப்பால், தழுவலால் பிறமொழிக் கலைச் செல்வங்களைத் தமிழில் குவித்தல் வேண்டும். இதுவே அவர் செய்யும் தமிழ்த்தொண்டு.

இன்று உலகத் தமிழ் என்னும் வகையில், தமிழியல் (Tamilology) இந்தியவியல் (Indology) என்று வளர்ந்து உலகமே நம்மை உணர்ந்து கற்க நினைந்து முனைந்து வருங் காலத்தில், உலகில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ்க்கலை வளர்ந்து வருங்காலத்தில், தமிழ்ப்பேராசிரியர்கள் தம்மை அதற்குப் பக்குவப்படுத்திப் பிற மொழிகளையும், கலைக்காக, நம்மொழி, நாடு வளர்ச்சிக்காகக் கற்று உலகில் பலவிடங் களிலும் சென்று நற்பணியாற்ற வேண்டும். நம் தமிழக அரசு அதற்கு வேண்டியவாறு பொருளாலும், அருளாலும் உதவி செய்தாலன்றி இன்னோரன்ன பெருஞ்செயல் நடைபெறுவது அரிதாதலின் நம்மரசும் அதற்குத் துணைசெய்தல் வேண்டும்.

மொழியியற் கலை வளர்ந்து வந்தபோது மொழியை அறிவியற் கண்ணோட்டத்தோடு கண்டு புதிய முறையிலான இலக்கணங்கள் உருவாகியுள்ளன. இதுபோன்று இலக்கியத் திலும் அறிவியல் அடிப்படையில் திறனாய்வு நூல்கள் பல்கின் பயன் பெரிதாகும்.

தமிழ்ப் பேராசிரியர்கள் இலக்கணத்தோடு, இலக்கியத் தோடு மட்டும் நின்றுவிட்டால் இனி வருங்காலத்திற்கு அது போதாதாகும். தமிழ்ப் பேராசிரியர்கள் முதல்வர்களாகவும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாகவும் வந்து திறம்படச் செயல்படுங்காலத்து நம்மை நாம் உணரல் வேண்டும். ஆகவே இலக்கியத்தைப், பொருளாதாரம், அரசியல், வரலாறு, சமூக வியல் முதலிய பல கண்ணோட்டத்திலும் பார்க்கும் பார்வையும் வேண்டும். மன்னர், வள்ளல்கள் கொடுக்கும் உணவை உண்டு பாடும் காலம் பழையது. நம்மைக் கண்டு பிறர் புகழ்பாடும் வகையில் நம் உழைப்பால் உயர்ந்து பணிசெய்யும் தமிழுக்கு அணிசெய்யும் செம்மலுள்ளம் வேண்டும். இன்று, இம் மாநாட்டில் கூட, நாகர்கோவில் மாநாட்டில் கருத்தரங்கு காலம் கழிவில்லாதபடி, விறுவிறுப்பாய், விருப்புடன் வித்தக மாய் நடந்து புத்தகமாகியது எனும் பெயர் நிறுவப்படின் அதுவே தமிழாசிரியர்களின் எதிர்கால உழைப்புக்கோர் உறுவிரதமாகும்.

தமிழ்ப் பேராசிரியர்கள் இவ்வளவில் மட்டும் நின்றுவிடாது பலதுறையில் புதிய படைப்புகளை உருப்படுத்திப் படைப்பாளிக ளாகிய ஆக்கியோர்களாக வருவதுதான், நாட்டின் முதற்பணி

யாகும். பேச்சைக் குறைத்து எழுத்தைப் பெருக்குவதும், உழைப்பைப் பெருக்குவதும், உயர்வுக்கு வித்துக்களாகும்.

இவற்றினும் மேலாக, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மொரிசியஸ் போன்ற தமிழர் வாழும் இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தியத் தூதுவர் குழுக்களில் தமிழ்க்கலை, பண்பு, உறவு வளர, வலுக்கத் தமிழ்ப் பேராசிரியர்களை இடம் பெறுமாறு செய்தலும் வேண்டும்.

மொழி, இலக்கியம் ஒருபுறம், அறிவியல் ஒருபுறமாக விட்டு நீங்கிக் கிடக்கின்றது. இன்று இந்நிலை நாட்டுக்கும், வாழ்வுக்கும் கேட்டுக்குக் காரணமாகுமாதலால் இரண்டும் இணைந்து செல்ல மக்கள் அறிவும் உணர்வும் கைகோத்துச் செல்லும். இரண்டு கையும், இரண்டு காலும் இணையும் போதே செயல் சிறக்கும். வாழ்வு சிறக்கும். அதுபோல் மொழியும்; அறிவியலும் இணையும்போதே உண்மை வழி பிறக்கும். வாழ்வில் வழி பிறக்கும் எனலாம்.

ஆகத் தமிழ்வாழ, நாடுவாழ, தமிழாசிரியர் ஒன்று படுவது போல, மொழியை, அறிவியலை ஒன்றுபடுத்தின், நன்று படுத்தும் என்று கூறின் அது மிகையாகாது.

இன்றைய மாநாட்டுக் கருத்தரங்கில் பதினொரு தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் வந்துள்ளன. அதில் மொழியியல் பல மேலைநாட்டு அறிஞர்களால் பெருவளர்ச்சியடைந்துள்ளது. எத்தனையோ நூல்கள், கட்டுரைகள் நாளும் தோன்றிக்கொண்டுள்ளன. டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தொடக்கமாகப் பலர் நம்நாட்டறிஞர்களாலும் பெருவளர்ச்சியும், பெருவிழிப்பும் அடைந்துள்ளமை பாராட்டுதற்குரியது.

மொழியியல் சாயல்பெற்று இலக்கணமும் புதிய பாதையினை மேற்கொண்டு, புத்துயிர் பெற்றுள்ளது. கற்போர், கற்பிப்போரது நோக்கும் இன்று வளம்பெற்று அறிவியல் அடிப்படையில் உச்சநிலை யடைந்துள்ளது.

ஆயின் இதே நிலையில் இலக்கியக் கொள்கைகளும், திறனாய்வுகளும் தமிழில் பெருவளர்ச்சியடையவில்லை, அறிவியல் போக்கில் வியக்கும் நிலையில் வளர்ச்சியடையவில்லை. இலக்கியப் பார்வைகள் இன்னும் பழம் பார்வையாகவே இருக்கின்றனவே தவிரப் புதிய கண்டுபிடிப்புகளைப் படைக்கவில்லை என்றுதான் கூறல் வேண்டும்.

இக்கால இலக்கியம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாயினும், மலையாளம், வங்காளம் இவற்றை

ஒப்பிட்டு நோக்குங்காலத்து அதுவும் இந்திய மொழிகள் நிலையில் உச்சநிலையடையவில்லை என்றுதான் சொல்லல் வேண்டும்.

நாட்டுப்பாடல் இன்றுதான் விழிப்படைந்து உருப்பெறத் தொடங்கியுள்ளது. இதுவரையும் அஃது உயர்நிலை பெருதது வருந்தத்தக்கதேயாகும்.

இனித் தமிழைப் பொறுத்த வரையில், அறிவியல் மிகப் பின் தங்கியே கிடக்கின்றது. அதிலும் உலகிலேயே இலக்கியம் தென் துருவமும், அறிவியல் வட துருவமுமாகவும் மிக எட்டிய நிலையிலேயே கிடப்பது வருந்தத்தக்கது. இத்தகைய நிலை என்றும் வாழ்வுக்கு வளந்தாராது. மாருக, வாழ்வைத் தாழ் வாக்கும். எவ்வாறு குடும்பத்தில் கணவனும், மனைவியும் வேறுபட்டிருந்தால் குடும்பம் நலமாகாதோ அதுபோன்றே இலக்கியமும், அறிவியலும் வேறுபட்டிருப்பின் வாழ்வு நல மாகாது. எனவே, இரண்டும் இணைந்த ஆய்வு மிகமிக இன்றி யமையாததாகும்.

இனித் தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறு முதலியன இடையருது தொடர்ந்த நிலையில் அறிவியல் முறையில் வளர்ச்சியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக இதுவரையும் தமிழருடைய பொருளாதார வரலாறு உருப்பெறவே இல்லை என்பது இரங்கத்தக்கது. பழைமையில் நம் தமிழர் பெருங் கப்பற்படைகொண்டு மேலை, கீழை நாடுகளில் கடல் வாணிபத்தினைச் சிறப்பாக மேற்கொண் டிருந்தனர். பல்லவரும், சிறப்பாகச் சோழரும் செய்த கடல் வாணிபம் உலகப் பொருளாதார வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. பின் அராபியர் கப்பற் படையினுல் தமிழர் கடல் வாணிபம் இருளாக்கப்பெற்றது. இந்தியாவில் கீழை நாடுகளில் அவர்கள் வாணிபம் பெருகத் தமிழர் கடல் வாணிப வரலாறு இருண்ட தாயிற்று. அதுகுறித்தோ முன்னும் பின்னுமுள்ள வரலாறு குறித்தோ அறிந்துகொள்ளப் பேராய்வு நடத்தல் வேண்டும். ஆய்வு என்பது தனித்தவர் செய்யும் குடிசைத் தொழிலன்று, பலர் கூடிச் செய்யும் பேராலைத் தொழிலாகும். இதற்குப் பலரும், பல ஆண்டும், பெரும் பொருளும் வேண்டும். இவற் றிற்கு நம் தமிழக அரசின் உதவியின்றி உரம் பெருதாதலின், பொருளாதார வரலாற்ருய்வினைக் கூட்டுமுறையில் மேற் கொள்ள வேண்டும் உதவிக்கு நம் தமிழரசினை வேண்டு கின்றேன்.

———

"பிள்ளை" இனப் பெருமை

[பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.]

முன்னுரை :

பண்டுதொட்டு மேம்பட்டுவரும் பழந்தமிழ்க் குடிகளுள் "வேளாளர்" இனமும் ஒன்றென்பதைத் தொல்காப்பியம் முதலான சங்க இலக்கியப் பனுவல்கள் பகர்கின்றன. இவ் வேளாள இனத்தார், "பிள்ளை" என்னும் செல்லப் பெயரால் அழைக்கப்பெற்று வருகின்றனர். இப் "பிள்ளை" இனப் பெருமைபற்றி இக் கட்டுரைக்கண் சிறிது ஆராய்வோம்.

தாளாண்மை மிக்க வேளாளர் :

பண்டைத் தமிழகத்தே சிறப்புற்றோங்கிய குலங்கள் நான்கு ; அவை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன. இந் நால்வகைக் குலங்களைப் பற்றிய குறிப்புகளை, ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்துட் காணலாம். (மரபியல்: 71-85).

"வேள்" என்னும் சொல்லினடியாகப் பிறந்தவை வேளிர், வேளாளர், வேளாண்மை, வேள்வி, வேண்மா போல்வன. பிறர்க்குதவும் பெற்றியே "வேள்" எனப்படும். வேளினை ஆளுந் தன்மை "வேளாண்மை" ஆகும். பிறர்க்குதவும் பெற்றியினையுடையோர், "வேள்" என்றும் "வேளிர்" என்றும், "வேளாளர்" என்றும், "வேண்மா" என்றும் இங்ஙனம் பலவாருகப் பாராட்டப் பெற்றனர்.

வேளாண் மாந்தர், பலவகைப்பட்ட தொழிலையுடையவரெனினும், உழுந்தொழிலே உயர்தொழிலாக் கொண்டவர். இதனைத் தொல்காப்பியர்,

> *"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல*
> *தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"* (மரபியல்: 80)

என்னும் நூற்பாவால் விளக்குவர். தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

> *"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்*
> *தொழுதுண்டு பின்செல் பவர்"* (குறள்: 1033)

என உழுதொழிலையுடைய வேளாளரையே உயர்வாக ஓதினர்.

வீழ்குடி உழவர் :

வேளாளர் (1) உழுதுண்போர் (2) உழுவித்துண்போர் என இருவகைப்படுவர். இவ்விரு வகை வேளாளரினும், நாகரிகமுதிர்ச்சியால் கொல்லாமை, புலால் உண்ணாமை எனும் அறங்களை மேற்கொண்டு ஒழுகுவார் "சைவ வேளாளர்" என்றும், ஏனையோர் "அசைவ வேளாளர்" என்றும் பெயர் பெறுவாராயினர். உழுதுண்ணும் வேளாளர்க்கு "வீழ்குடி உழவர்" என்ற வேறு பெயருமுண்டு. காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறப்பிக்கவந்த சேரர் செம்மல் இளங்கோவடிகள்,

"மாட மறுகும் மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை...இருக்கையும்"
(சிலம்பு : 5 : 41-43)

என்கின்றார். "வீழ்குடி" என்பதற்கு, "உழவின்மேல் விரும்பும் குடி" என்றும், "யாவரும் விரும்பும் குடி" என்றும் பொருள் கொள்ளலாம். சிறிய நிலங்களைப் பெற்று, உழுதுண்ணும் வேளாளர் "வீழ்குடி உழவர்" என்றழைக்கப்பட்டமையான், பெருஞ் செல்வராகவும், பெருநிலக் கிழாராகவும் விளங்கிய ஏனையோர் "உழுவித்துண்ணும் வேளாளர்" என்றழைக்கப் படுவாராயினர்.

மகட்கோடை அவிக்கும் மாண்பினர் :

இத்தகு வேளாளர், முடியுடை மூவேந்தரொடு ஒப்ப மதிக்கும் பேராண்மையும் பெற்றிருந்தனர். தமிழகத்தே ஆங்காங்குள்ள குறுநிலப்பகுதிகளை ஆட்சிபுரிந்த "வேளிர்"களும், தானைத் தலைமையேற்ற தண்டத் தலைவர்களும், புலமைத் திறம் நடாத்திப் பெரும்பெரும் போர்களைத் தடுத்து நிறுத்திய "கிழார்"களும், இவ் வேளாண்மரபைச் சார்ந்தவர்களே. பாண்டிநாட்டு வேளாண்மாந்தரிற் சிலர், பாண்டியப் பேரரசரால் "காவிதி" எனும் கவினுறு பட்டம் பெற்றமையைச் சங்க இலக்கியம் கூறும். (ம. காஞ்சி) அன்றியும் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை அவிக்கும் உரிமையையும் இவ் வேளாளர் பெற்றிருந்தனர். ஒரே குடியில் தோன்றினலன்றிப் பெண் கொடுத்தலும், பெண் ஏற்றலும் அத்துணை எளிதில் நடைபெறா. எனவே, முடியுடை வேந்தரும் இவ் வேளாளரினத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். மேலும், வேள் பாரி, வேள் எவ்வி, ஆய் முதலான குறுநில மன்னர்களும் இவ வேளாண் மரபைச் சார்ந்தவரேயாவர். இதுபற்றியே

தொல்காப்பியரும், அரசர்க்குரிய சிறப்புகள் வேளாண் மாந்தர்க்கும் உண்டு என உரைப்பாராயினர்.

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே'' (மரபியல்: 83)

என்பது அவர் கூற்று. மேலும் அவர், இவ் வேளாளரை ''மன்னர் பாங்கின் பின்னோர்'' என்றும் போற்றுகின்றார்.

"மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப"

(அகத்திணையியல் : 30)

என்பது நூற்பா. இதற்கு உரைகூறவந்த உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

''அரசரைச் சார்ந்து வாழும் பக்கத்தராகிநிற்றல் காரணமாகப் பின்னோர் எனப்பட்ட வேளாளர், வரையறையின்றி வேந்தன் ஏவிய திறமெல்லாவற்றினும் பிரிதற்கு ஆக்கமுடையராகுப.

''மன்னர் பின்னோர் என்ற பன்மையான், முடியுடையோரும், முடியில்லாதோரும், உழுவித்து உண்போரும், உழுது உண்போரும் என மன்னரும் வேளாளரும் பலர் என்றார். வேளாண் மாந்தர்க்கு (635), வேந்துவிடு தொழிலில் (636) என்னும் மரபியற் சூத்திரங்களால் வேளாளர் இருவகையர் என்ப. அரசர் ஏவுந் திறமாவன: பகைவர்மேலும், நாடு காத்தன்மேலும், சந்து செய்வித்தல்மேலும், பொருள் வருவாய்மேலுமாம். அவருள் உழுவித்துண்போர் மண்டில மாக்களும், தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியிற் றோன்றி வேள் எனவும், அரசு எனவும் உரிமை எய்தினோரும், பாண்டி நாட்டுக் காவிதிப்பட்டம் எய்தினோரும், குறுமுடிக் குடிப் பிறந்தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்கு உரிய வேளாளராகுப..............உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேளிடை மகட் கோடலும், அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான், நாங்கூர் வேளிடை மகட் கோடலும் உறுவர்.''

(அகத்திணையியல் 30 : நச்சர்)

வேளிர் மரபினர்:

மேற்கூறிய காரணங்களால், முடியுடை வேந்தர்க்குரிய தொழிலாகிய இலக்கணங்கள், குறுநில மன்னராகிய வேளிர்க்கும் பொருந்தும் என்பர் தொல்காப்பியர்.

"வேந்துவினை யியற்கை வேந்த னொரீஇய
ஏனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே"
(அகத்திணையியல்: 32: நச்சர்)

"தமிழர் சரித்திர" நூலாசிரியர் திரு ந. சி. கந்தையா பிள்ளை, பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "கரிகாலன், அருவாளரை வென்று அவர்நாட்டைத் தனது தேசத்தோடு இணைத்தபோது, வெற்றிகொண்ட நிலத்தை வேளாண் பிரபுக்களுக்குப் பகுத்தளித்தான். அப் பிரபுக்கள் வழியில் வந்தோர் பெருநிலமுடையராய், ஆங்கில அரசின்கீழ்ச் சிறு சமீன்தார்களா யிருந்தனர். தெலுங்கு நாட்டை வென்ற வேளாண் குடும்பத்தினர் 'வேம்மா' என்றழைக்கப்படுகின்றனர். அங்குள்ள பெரிய சமீன்தார்கள், இன்றும் வேள்மா மரபினரே." (தமிழர் சரித்திரம்—ந. சி. கந்தையாபிள்ளை பக்கம் 89, 90).

பெருங்கதை நூலாசிரியராகிய "கொங்குவேளிர்" என்பாரைப் பற்றிக் குறிப்பிடவந்த தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் பின்வருமாறு சுட்டுகிறார்: "பெருங்கதை நூலாசிரியராகிய கொங்கு வேளிர் என்பார், கொங்கு நாட்டு வேளாள வகுப்பினரைச் சார்ந்த சிற்றரசர்களுள் ஒருவர். இவருக்குரிய வேளிர் என்னும் பட்டப் பெயரும் இக்கருத்தை வலியுறுத்தும். அழுந்தூர் வேள், நாங்கூர் வேள் என்பாரைப் போல முடிமன்னர்பால் மகட்கோடை நேர்தற்குரிய பெருமை வாய்ந்தவர் என்று இவர் கருதப்படுகிறார்". (பெருங்கதை: உ. வே. சா. பக்கம் xivi).

பேரூர் புரக்கும் கிழார்கள்:

முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை நல்கும் பெருமாண்புற்ற இவ் வேளாளர், குறுநில மன்னராகமட்டுமன்றிப் பேரூர் புரக்கும் "கிழார்"களாகவும் இருந்து ஊராட்சிசெலுத்திப் புலமைச் செருக்கால் மேம்பட்டு விளங்கினர் என்பதையும் அறிகின்றோம். "கிழார்" எனுஞ்சொல், வேளாளர்க்கே உரிய சிறப்புப் பெயராகும். அரிசில் கிழார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், ஆவூர் மூலங் கிழார், இடைக்குன்றூர் கிழார், ஐயூர் மூலங் கிழார், காரி கிழார், குறுங்கோழியூர் கிழார், குன்றூர் கிழார் மகனார் கூடலூர் கிழார், கோவூர் கிழார்,

துறையூர் ஓடை கிழார், நொச்சி நியமங்கிழார், பெருங்குன்றூர் கிழார், மாங்குடி கிழார், வடமோதங் கிழார் முதலான பல கிழார்களும், சங்ககாலத்தே வீறுபெற்றுயர்ந்த வேளாண் புலவர்களாவர். அம்பர் கிழான் அருவந்தை, ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், அரும்பனூர் கிழான், கொண்கானங் கிழான், சிறுகுடி கிழான் பண்ணன், சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ் சாத்தன், நாலை கிழவன் நாகன், பொறையாற்று கிழான், பல்லி கிழான் காரியாதி, வல்லார் கிழான் பண்ணன் முதலான பல கிழார்களும், புலவராற் பாடப்பெற்ற புரவலராய் இலங்கி யுள்ளனர். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய "மதுரைக் காஞ்சி" யைப் பாடிய மாங்குடி மருதனாரும், வேளாண் புலவரே. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"

(புறநானூறு: 72 : 13-16)

என வஞ்சினங் கூறும் கூற்றால், மாங்குடி மருதனார்பால் பாண்டியன் வைத்த பெருமதிப்புப் புலனாகும். "மலைபடுகடாம்" என்ற நூலின் பாட்டுடைத்தலைவனாகிய "நன்னன்" என்பானும் வேளிர் குலத்தவனே.

தானைத்தலைமை :

நாட்டாட்சியும், ஊராட்சியும், புலமைத்திறமும் உடை யோராய் விளங்கிய இவ்வேளாளர், நாடுகாக்கும் தானைத் தலைவராகவும் இருந்துள்ளனர். "வேளாளர், படைவகை பெறுவர்" என்று கூறுகிறது தொல்காப்பியம். (மரபியல்: 81 : பேராசிரியம்) அழும்பில் வேள் என்னும் தானைத்தலைவனைப் பற்றிச் சிலப்பதிகாரம் செப்புகிறது. இருங்கோவேள்மான் என்ற வேளிர்குலவேந்தன், பாண்டியனை எதிர்த்த செய்தியைப் புறநானூறு புகல்கிறது. (புறம்: 76). சங்ககாலந் தொட்டு இற்றைக்காலம்வரை இவ் வேளாள இனத்தார், வீரத்திற் குன்றாதவராய், நாடு காக்கும் நல்லோராய் இருந்து வந்துள்ளனர். வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்தே வாழ்ந்த தானாதிபதிப் பிள்ளையையும், ஆங்கிலேயராட்சியை எதிர்த்துக் கப்பலோட்டிய வீரர் வ. உ. சிதம்பரம்பிள்ளையையும் அறியாதார் இலர்.

"பிள்ளை" எனும் பெரும்பெயர் :

வீரத்தில் மேலோங்கிய இத்தகைய வேளாளர்கள், "பிள்ளை" என்னும் செல்லப்பெயரால் இன்று தமிழகத்தில் அழைக்கப் பெறுகின்றனரல்லரோ? இப் பெயர் இவர்கட்கு எங்ஙனம் வந்தது எனக் காண்போம்.

இளமைப் பெயர்களுள் "பிள்ளை" என்பதும் ஒன்று. இஃது அஃறிணைக்கும் உரியது; உயர்திணைக்கும் உரியது. (மரபியல்: 1, 4, 11, 14, 24, 70).

யாரேனுமொருவர், தம் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு செயலைச் செய்துவிடுவாரானால், "இஃது என்ன பிள்ளைத் தனமாக உள்ளதே?" எனக் கூறுவது உண்டு. வீரனொருவன், போர்க்களத்தே, தன் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட பல வீரச் செயல்களை நிகழ்த்துவானானால், அவன் செயல்களைப் பிள்ளைமைத் தன்மைக்கு ஒப்பிடுவர்; அவனைப் "பிள்ளை" என்றே போற்றுவர். இவ்வாறு பிள்ளைமைத் தன்மை கொண்டு பிறங்கிய வீரனொருவனைத் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை முதலான இலக்கண நூல்கள் விரித்துரைக்கின்றன.

பிள்ளை நிலை, பிள்ளையாட்டு என்ற இரு மறத்துறைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இங்குச் சுட்டப்படும் "பிள்ளை" என்னுஞ் சொல், சிறந்த வீரனைக் குறிப்பிடுகின்றது. "இளங்கன்று பயமறியாது" என்பதற்கிணங்கப் போர்க் களத்தே எத்தகைய அரியசெயலையும் பிள்ளை விளையாட்டாகக் கருதிப் போரிடும் வீரனைப் "பிள்ளை" என்றழைப்பது பொருத்தமே. பிள்ளை நிலை என்ற துறை இருவகைப்படும்: ஒன்று, வருதார் தாங்கல்: மற்றொன்று வாள்வாய்த்துக் கவிழ்தல். வருதார் தாங்கல் என்பது, தன்மேல் அடுத்தடுத்து வரும் முன்னணிப்படையை வீரனொருவன் தன்னந்தனியனாக நின்று தடுத்தல் ஆகும். வாள்வாய்த்துக் கவிழ்தல் என்பது, வாட்போரில் பொய்த்தல் இல்லாமல் மாற்றாரைக் கொன்று தானும் வீழ்தல் ஆகும். இனிப் "பிள்ளையாட்டு" என்பது, போரில் வாளால் பொருது பகைவரை வென்று மீண்ட வீரனொருவனைக் கண்டு உவந்து, முரசங்கள் ஒலிக்குமாறு, அவனுக்கு நாட்டைப் பரிசிலாக அளிப்பது ஆகும். (அகத் : 5 : ச. சோ. பாரதி உரை) ("வாளாற் பொருது உயர்ந்த அரசிளங்குமரனாகிய வீரனை, அந்நாட்டிலுள்ளார் கண்டுவந்து, பறை ஒலிக்க அவனுக்கு அரசு கொடுத்த நிலை "பிள்ளையாட்டு" எனப்படும் என்பர் நச்சினார்க்கினியர்.) (நூற்பா 5 : நச்சர்).

"வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்"
(தொல் : அகத்திணையியல் : 5)

என்பது தொல்காப்பிய நூற்பா.

புறப்பொருள் வெண்பாமாலையிலும், "ஆளெறி பிள்ளை", "பிள்ளைத் தெளிவு", "பிள்ளை யாட்டு" முதலான துறைகள் பேசப்படுகின்றன. போர்க்களத்தே பகைவர்க்கு முன்னிலையில் நிற்கமாட்டாமல் அஞ்சி ஓடிவரும் பலரைக்கண்ட வீரனொருவன், அங்ஙனம் அஞ்சி ஓடுவாரைப் போகச்செய்து, தான் ஒருவனாகவே நின்று, பகைவரிடைப் புகுந்து, பகைவீரர் பலரைக் கொன்றழிக்கும் பேராண்மைக்கு "ஆளெறி பிள்ளை" என்று பெயர்.

"பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க ஆளெறிந்து
கொள்ளைகொள் ஆயம் தலைக்கொண்டார்—எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்று னுளன"
(புறப். வெ. மாலை : கரந்தை : நூற்பா 6)

என்பது இதற்கெடுத்துக்காட்டாகும். பகைவரது உயிர் உலரும்படியாக, அவர்தம் தலையினை அறுத்து முண்டமாக்கிய பிள்ளைத் தன்மையினைக் கொண்ட வீரன் ஒருவன், போர்க்களத்தில், பொலிவுடைய தனது வாளினை உறையினின்றும் எடுத்தவன் பறையின் ஆர்ப்பொலி மிக, ஏனை வீரரைக் காட்டிலும் முன்னாக நின்று, அடிமேல் அடிவைத்து வீரத்துடன் ஆடுவான். இது "பிள்ளைத் தெளிவு" எனப்படும். "மேவார் உயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்" எனும் பாடல் இதனை விளக்கும். (புறப். வெ. மாலை : கரந்தை 7) பகைவரை மாளப்பண்ணின பிள்ளைத் தன்மையினை உடைய வீரனொருவன், பகைவரது மார்பைப் பிளந்து, மீளப் பறித்த தன் வேலினை அப் பகைவரது குடர் மாலையினாலே சுற்றிக்கொண்டு, எஞ்சிய பகைவர் அஞ்சி ஓடுமாறு தன்வேலைச் சுழற்றி ஆடுவான். இதற்குப் "பிள்ளை யாட்டு" என்று பெயர். "மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து" எனும் பாடல் இதற்குச் சான்று. (புறப். வெ. மாலை : கரந்தை : 8).

மேற்காட்டிய சான்றுகளால். போர்க்களத்தே அஞ்சாது போரிடும் பிள்ளைத்தன்மை எய்திய வீரனுக்குப் "பிள்ளை" என்ற பெயர் ஏற்பட்டது என அறியலாம். இத்தகைய வீரத் தன்மை கொண்டு, நாடுகாக்கும் தானைத் தலைவராகவு மிருந்த வேளாண் மாந்தர்க்குப் "பிள்ளை" எனும் பெரும்பெயர் ஏற்பட்டதில் வியப்பில்லை. "பிள்ளை" என்பதனோடு "மார்"

எனும் விகுதி சேரப் "பிள்ளைமார்" என இன்று அழைக்கப் படுகின்றனர். அன்றியும் "ஆர்" எனும் விகுதியுடன் "பிள்ளையார்" என்றும் அழைக்கப்பட்டுவந்தனர் என்பதற்குக் கல்வெட்டொன்று சான்றுபகர்கின்றது.

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் அரசியல் அதிகாரியாக விளங்கியவன் "பிள்ளையார் அழகப் பெருமான்" என்பவன். இவன்பால், ஊர்மக்கள், தாங்கள் இதுகாறும் அரசனுக்குச் செலுத்திவந்த வரியைக் குறைக்குமாறு விண்ணப் பிக்க, இவன் இச் செய்தியைச் சுந்தரபாண்டியனுக்குத் தெரிவித்து, நினைப்புமிட்டுப் பின்னர் வரியைக் குறைக்கச் செய்தான். இதுபற்றிய கல்வெட்டு, புதுக்கோட்டை — திருமய்யம் தாலுகா கண்ணனூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் உள்ளது. "பிள்ளையார் என்பது, அரசருடைய நெருங்கிய சுற்றத்தார்க்கும், நெருங்கிய தொடர்புடைய அரசியலதிகாரி கட்கும் வழங்கும் பொதுப் பெயர். பிள்ளையார் அழகப் பெருமான், சுந்தரபாண்டியனுக்கு மைத்துனன் முறையினன்" என்று குறிப் பிடுகிருர் திரு. வ. தங்கையாநாடார். (தெ. இ. த. சாசனம்— வ. தங்கையாநாடார் – கழகம் 1963. பக்கம் : 230).

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்ருல், தாளாண்மைமிக்க வேளாண் மாந்தர், முடிமன்னர்க்கு மகட்கொடை நல்கும் மாண்பினராய், "வேளிர்" எனும் பெயர்பூண்டு குறுநிலத்தை ஆளும் கொற்ற வராய்க், "கிழார்" எனும் உரிமைப் பெயர்கொண்டு நாட்டாட்சி செலுத்தும் நல்லோராய்ச், செஞ்சொற் பாப் புனையும் பாவல்லோராய், வரையாது உவந்தீயும் வள்ளல் களாய், தானைத் தலைமை பூணும் "பிள்ளை"களாய் வீறுகொண்டு விளங்கினர் என்பதை ஒருவாறு அறியலானேம். இத்தகு இனத்தார், இன்றும் நம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பாண்டிநாட்டில் வாழும் இம் மர பினர்க்குப் "பாண்டிய வேளாளர்" என்றும், சோழநாட்டில் வாழும் இவ்வினத்தார்க்குச் "சோழிய வேளாளர்" என்றும், நாஞ்சில் நாட்டில் வாழும் இக்குலத்தார்க்கு "நாஞ்சில் வேளாளர்" என்றும், கொங்கு நாட்டில் வாழும் இவ் வேளாளர்க்குக் "கொங்கு வேளாளர்" என்றும், தொண்டை நாட்டில் வாழும் இக்குடியினர்க்குத் "தொண்டைமண்டல வேளாளர்" என்றும் பெயர்கள் நிலவுகின்றன. இவர்களனை வரும் "பிள்ளை" அல்லது "பிள்ளைமார்" என்னும் சிறப்புறு பட்டங்கொண்டு திகழ்ந்துவருதலை அனைவரும் அறிவர்.

———

செந்தமிழ்ப் புலவரும் சேக்சுபியரும்

[அ. கேசவமூர்த்தி]

1. ஒப்பிலக்கிய ஆராய்ச்சி :

காலத்தாலும் நாட்டாலும் மொழியாலும் மாறுபடும் அறிஞர்கள் கருத்தால் ஒன்றுபடும் காட்சியை இலக்கியம் வழங்குகிறது. அறிஞர் சிந்தனை ஒருசீராகவே இருக்கும் எனும் ஆங்கிலப் பழமொழி இதை உறுதிப்படுத்துகிறது. ஆங்கில மொழி உலகின் தலையாய மொழியாகத் திகழ்கிறது; அம் மொழியின் தலையாய பேரறிஞர் சேக்சுபியர் ஆவர். அவருடைய கருத்துகள் பல செந்தமிழ் இலக்கியத்தில் சிறப்பாகக் காணப் படுகின்றன என்ற உண்மையை ஒப்பிலக்கிய அடிப்படையில் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் கருத்தாகும். ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதினர் என்று கூறுவது எமது எண்ணம் அன்று; நிலையான உண்மைகளும் மெய்யான கருத்துகளும் எங்கும் என்றும் ஏத்தப்படும்; ஏற்கப்படும் என்று எடுத்துக் காட்டுவதே எம் குறிக்கோள் ஆகும்.

2. முகம் :

ஒருவருடைய முகம் அவரது கருத்தை வெளிப்படுத்து கிறது; 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழ மொழி. "Face is the index of the mind" என்பது ஆங்கிலப் பொருள் மொழி. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்பது குறள். "முன்னே நிறுத் துங்கள்; முகத்தைப் பார்க்கிலேன்" என்று சூலியசு சீசர் நாடகத்தில் சீசர் கூற்று அமைகிறது. "வெனிசு வணிகன்" நாடகத்தில் அண்டோனியோ கடிதத்தைப் படித்து பசா னியோ உள்ளம் வாடுகிறான்; அதனால் அவன் முகம் மாறுபடும் போது இதே கருத்து எடுத்துக்காட்டப்படுகிறது. ஆம்லெட் நாடகத்தில் கில்டன்சுடெரின் என்பவனை நோக்கி ஆம்லெட் பேசும் கருத்து அகத்தின் அமைப்பை முகம் உணர்த்தும் என் பதை அரண் செய்கிறது. கோமகன் நான்காம் என்ரி நாடகத்தில் ஆட்சுபெர் என்பவரிடம் பெருமாட்டி பெர்சி பேசும்போது இதே கருத்து காட்டப்படுகிறது கோமகன் ஐந்தாம் என்ரி எனும் நாடகத்தில் காம்பிரிட்சு சீமானைப் பார்த்து அரசன் உரையாடும்போது "காகிதத்தில் என்ன காண்கிறாய்? உன் கன்னங்களே காகிதம்போல் எண்ணங்களை எடுத்துக் காட்டுகின்றன" எனக் கூறுகிறான்.

3. கண் (புறப்பொருள்) :

முகத்தைக்காட்டிலும் ஒருவரது கண் உள்ளக்கருத்தைத் தெள்ளத் தெளியத் தெரிவித்துவிடும். இடுக்கண், புன்கண், புறக்கணித்தல், கடைக்கணித்தல் முதலிய சொற்கள் கண்ணின் முதன்மையைக் காட்டுகின்றன. "பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின்" என்பது வள்ளுவர் வாய்மொழி. ரிச்சர்ட் அரசன் எனும் நாடகத்தில் "காண்ட்" என்பானை நோக்கி அரசன், "உம் கண்களின் மூலமாக உமது கவலையற்ற மனதைக் காண்கிறேன்" என்று கூறுவது இங்கு எண்ணத்தக்கது. கோமகன் நான்காம் என்ரி எனும் நாடகத்தில் ஓர்செசுட்டரை நோக்கி அரசன் "அபாயத்தையும் ஆணைமீறலையும் உம் கண்களில் காண்கிறேன்" என்று பேசுகிறான்.

4. கண் (அகப்பொருள்) :

விழியாலே மொழிபேசும் விந்தை காதலர் உலகிலே உண்டு. "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள், என்ன பயனும் இல" என்பது குறள். "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" கம்பர் தரும் காட்சி. "சூறுவளி" என்ற நாடகத்தில் காதலித்த நிகழ்ச்சி "முதற் பார்வையில் கண்ணொடு கண் கலந்தனர்" என்று வர்ணிக்கப் படுகிறது. வெனிசுவணிகன் நாடகத்தில் காதலி போர்சியா பற்றி பசானியோ தன் நண்பனிடம் "சொல்லுக்கடங்காத சுவைமிக்க கருத்துரையை அவள் கண்கள் மூலம் அடைகிறேன்" என்று கூறுகிறான். "நீ விரும்பியபடியே" எனும் நாடகத்தில் ரோசலிண்ட் ஆர்லண்டோ காதல் உரையாடல் நிகழ்கிறது. சிங்கத்தின் கூர்நகங்களால் உன் சிந்தை புண்பட்டுள்ளதென எண்ணுகிறேன் என்று காதலி கூற, புண்பட்டுள்ளது உண்மை, ஆனால் அது பூவையின் கண்களால் என்று காதலன் விளக்குவது இங்குக் கருதத்தக்கது.

5. வாழ்வும் கடலும் :

கடல் பெரியது; கடற்பயணம் மிக அரியது. எனவே பழந்தமிழ்ப் புலவர் வாழ்வுச் சிக்கலுக்கு நீர்வழிப் பயணத்தை உவமையாக்கினர். "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம்" "மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின், ஆராஅர் உற்ற நெஞ்சமொடு ஒராங்கு, கண்ணில் ஊமன் கடல் பட்டாங்கு" என்பன புறப்பாடல் கருத்துகள் ஆகும். கடுமையான வன்மைமிக்க கடலில் அலைக்கழிக்கப்பட்டு மிதந்து

செல்வது பற்றி "மாக்பெத்" நாடகம் குறிப்பிடுகிறது. "முழுக்கடல் மேலே மிதக்கிறேம் நாம்; நீரோட்டத்தை நமக்குத் துணையாக்கிக் கொள்ளவேண்டும்; இன்றேல் தொலைந்துவிடும் நம் முயற்சிகள்" என்று சூலியசுசீசர் நாடகத்தில் பேசப்படுகிறது.

6. நாடகமே உலகம்:

நாடகமேடை போன்றது உலகவாழ்க்கை எனும் கருத்து தமிழ் இலக்கியத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. "கூத்தாட் டவைக்குழாத் தற்றே" எனக் குறள் கூறுவதை மறக்க முடியுமா? "விழவிற் கோடியர் நீர்மைபோல முறை முறை ஆடுநர் கழியும் இவ்வுலகத்து" என்று புறம் கூறுகிறது. வெனிசுவணிகன் நாடகத்தில் கிராசியானேவை நோக்கி அண்டோனியோ, "இவ்வுலகம் ஒரு நாடக மேடை; ஒவ்வொரு மனிதனும் ஒரு பாகத்தில் நடித்தாக வேண்டும்" என்று கூறுகிருன். 'கோமகன் லீயர்' எனும் நாடகத்தில் குளோசெட்டரை நோக்கி லீயர் பேசுகிருன்—பிறந்தவுடனே அழுகிறேம்; முட்டாள்கள் நிரம்பிய பெரிய இந் நாடகமேடைக்கு வந்துவிட்டோம் எனும் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது. "நீ விரும்பியபடியே" எனும் நாடகத்தில் இக் கருத்து விரித்து விளக்கப்படுகிறது. "உலகம் ஒரு பெரிய நாடக மேடை; ஆணும் பெண்ணும் அதில் நடிகர்களே" என்பது சேக்கசு செப்பும் கருத்தாகும்!

7. உறங்குவது போலும் சாக்காடு:

சாவு எத்தகையது? உறக்கம் போன்றது சாவு என்பார் திருவள்ளுவர். இதே கருத்தை ஆம்லெட் நாடகத்தில் காண்கிறேம். "சாவது உறங்குவது, அவ்வளவே; சாவது உறங்குவது, உறங்குவதே" என்று ஆம்லெட் தனிமொழியாகப் பேசுகிருன்.

8. ஓர் ஒக்கும்மே:

நாட்டை ஆளும் மன்னருக்கும் நாட்டில் வாழும் மக்களுக்கும் வேற்றுமை உள்ளத்துணர்ச்சிகளைப் பொறுத்தவரையில் எள்ளளவும் இல்லை. "உண்பது நாழி உடுப்பது இரண்டே, பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே" என்பது நக்கீரனரது நல்லுரை. கோமகன் ரிச்சர்ட் நாடகத்தில் கார்லிசுவியை நோக்கி அரசன் பேசுவது இங்கு ஆராயத்தக்கது.

"உன்னைப்போல் உண்கிறேன்; தேவைகளை உணர்கிறேன்; வேதனையைச் சுவைக்கிறேன்; நண்பர்களை நாடுகிறேன்—இப்படியெல்லாம் பொதுவாயிருக்க, என்னை அரசன் என அழைப்பது எவ்வாறு முறை" என வினவப்படுகிறது. கோமகன் ஐந்தாம் என்ரி எனும் நாடகத்தில் பேடசு என்பானை நோக்கி அரசன் இக்கருத்தையே பேசுகிறான். "மன்னன் என்பானும் மனிதன் என்றே நினைக்கிறேன்; எனக்குப் போலவே அவனுக்கும் மலர் மணம் தருகிறது; எனக்குப் போலவே அவனுக்கும் வானம் காட்சிகளை வழங்குகிறது; அவனுடைய உணர்ச்சிகள் மனித இயல்பை யுடையனவே; அரசனுக்குரிய ஆடம்பரங்களை அகற்றிவிட்டால், அவனும் மனிதன் போலவே தோற்றமளிக்கிறான்." மன்னராட்சி மறையவும் மக்களாட்சி மலரவும் இலக்கியம் ஆற்றிய புரட்சியை இங்கே காணலாம்.

9. குறையும் நரையும் :

வாழ்வில் குறை இல்லையெனில் தலையில் நரை இராது என்பது பிசிராந்தையார் எனும் பழந்தமிழ்ப் புலவரின் முடிவாகும்.

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என்இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

என்பது அவரது அனுபவ விளக்கமாகும். கோமகன் நான்காம் என்ரி எனும் நாடகத்தில் பால்சுடாப் என்பான் இளவரசனிடம் பகைவரது படை எழுச்சிச் சேதி கேட்டுத் தந்தையின் தாடி வெண்மையாக மாறிவிட்டது என விளக்குவது இங்கு எண்ணத்தக்கது.

10. காதல் வேகம் :

காதலியின் கண் பார்வை காதலருக்குக் களிப்பையும் எழுச்சியையும் தரும் என்ற வருணனையைத் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்" "காற்றிலேறி விண்ணையும் சாடுவோம், காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே" என்பன போன்ற காதல் விளக்கங்களும் கனிவு முழக்கங்களும் கணக்கற்றுக் காட்சியளிக்கின்றன. "சூறுவளி" எனும் நாடகத்தில் காதலியை நினைந்து காதலன் உருகுகிறான் "என் தலைவிக்கு நான் செய்யும் தொண்டால்

துன்பம் இன்பமாக மாறுகிறது. இந்த இன்ப நினைவுகள் எனது வேலையினூடே புத்துணர்ச்சி அளிக்கின்றன. என்னைச் சோம்பேறியாக்கி இருக்கச் செய்து நீ கடும் துன்பம் ஏற்பதைக் காட்டிலும், காதலியே என் தசைகள் தகர்க்கப்படட்டும்; முதுகு முரிந்து போகட்டும்.'' இதுபோன்ற சூளுரையை வெனிசு வணிகன் எனும் நாடகத்தில் மொராக்கோ இளவரசன் போர்சியாவிடம் பேசுகிறான். ''கடுங்கண் மறவரைக் கடுமையாக நோக்குவேன்; மண்ணில் மறமிகு மனதை எதிர்ப்பேன்; பால்மறவாக்குட்டியைக் கரடியிடம் பறிப்பேன்; அம்மட்டோ! இரைதேடும் சிங்கத்தை எள்ளுவேன்; மங்கையைக் கவர இங்கிவை செய்வேன்.'' காதல்வேகம் உலகெங்கும் கடுமையாகவே ஓடிற்று என்பதை இதனால் கண்டோம்.

11. மகளிர் மனம் :

உடல் அமைப்புப்போலவே மனஅமைப்பிலும் பெண் ஆணிலிருந்து மாறுபடுகிறாள். மென்மைத் தன்மை பெண் மையின் தனிப்பெரும் பண்பாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று பழைய ஏடுகள் அப் பண்புகளைப் பாராட்டு கின்றன. சூலியசு சீசர் நாடகத்தில் போர்சியா கூற்றாக ''ஆணின் மூளை பெற்றுள்ளேன்; ஆனால் பெண்ணின் வலிமையே உண்டு; இரகசியத்தை மறைத்தல் மாதருக்கு மிகக் கடினம்...... மாதரின் மனம் மிகவும் உறுதியற்றது'' இவ்வாறு புருட்டசின் மனைவி பேசுகிறாள். ''பன்னிரெண்டாம் இரவு'' எனும் நாடகத்தில் ஒலிவியா பற்றி வயலோ பேசும் போது பெண்மையின் தன்மையாக இதே கருத்துக் காட்டப்படு கிறது. ''நீ விரும்பியபடியே'' எனும் நாடகத்தில் ரோசலிண்ட் சீலியாவிடம் பேசும்போது மறைகாக்கும் குணம் மாதரிடம் இல்லை என்பது காட்டப்படுகிறது. ''நான் பெண் என்பது தெரியவில்லையா? நான் சிந்தித்தால், அதைப் பேசியே ஆக வேண்டும்''. ஆம்லெட் நாடகத்தில் ஆம்லெட்டின் தனி மொழி உலகப் புகழ் பெற்றது! சபலமே உன்பெயரே பெண் ஆகும் என்பது அவன் கூற்றாகும். கோமகன் நான்காம் என்ரி நாடகத்திலும் பெருமாட்டி பெர்சி காட்சுபர் அதே குணத்தைக் கூறுகிறார். ''உறுதியாக இருந்தாலும், நீ ஒரு பெண்; மறை காக்க மாதர் நெருங்கக் கூடாது; எனக்கு நன்கு தெரியும் நீ எதுவும் சொல்லமாட்டாய்—உனக்குத் தெரியாத எதுவும் பற்றி''.

12. விழுப்புண் :

போர்க்களத்தில் போரிடும்போது முகத்திலும் மார்பிலும் புண் பெறுதலை விழுமிய புண் என்று வீரர் மதித்தனர்;

விரும்பிப் போற்றினர்.

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து"

என்பது குறள்.

மார்பில் தைத்த வேல் ஊடுருவி முதுகுப்பக்கம் வந்ததற்கு நாணிச் சேரன் மாண்டான். புறப்புண்பட்டு மைந்தன் மாண்டான் எனக் கேட்டு "பால்உண்ட என் மார்பு அறுத்திடு வேன்" எனச் சூளுரைத்த வீரத் தாயைப் புறநானூற்றில் பார்க்கிறோம். மாக்பெத் நாடகத்தில் சிவார்ட் என்பான் தன் மகன் களத்தில் இறந்ததுபற்றிக் கேட்கும் உரையாடல் விழுப் புண்போற்றும் வீரத்தைக் காட்டுகிறது.

ரோசு : வீரனுடைய கடனை உன் மகன் செலுத்தினான்.

சிவார்ட் : காயங்களை முன்பக்கத்தே பெற்றானா ?

ரோசு : ஆ! முன்பக்கத்தே தான் !

சிவார்ட் : அப்படியானால் நன்று ! தெய்வவீரனாக அவன் திகழ்க! எண்ணற்ற புதல்வர் எனக்கு இருந் தாலும் இதைவிடச் சிறந்த முடிவை அவர்கட்கு நான் விரும்ப மாட்டேன்.

விழுப்புண் போற்றும் வீரம் பாராட்டத்தக்கது.

13. நிமித்தம் :

ஒரு பெருநிகழ்ச்சி நடப்பதற்கு முன்அறிவிப்பாகச் சில அடையாளங்கள் நிகழும் என்பது தமிழ் இலக்கிய மரபாகும். விரிச்சி கேட்டலை முல்லைப் பாட்டு காட்டும். மாக்பெத் நாடகத் திலும், ஜூலியசு சீசர் நாடகத்திலும் கோமகன் லியர் நாடகத் திலும், ஆம்லெட் நாடகத்திலும், கோமகன் ரிச்சர்ட் நாடகத் திலும் இதே மரபு காணப்படுகிறது.

14. ஓரையும் நாளும் :

நாள் நட்சத்திரம் பார்த்துச் செயல்புரிதல் தமிழ்நூல் காட்டும் வழக்கமாகும் ; "மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை" என்பது தொல்காப்பியம் ; குடைநாட்கோள், வாள்நாட்கோள் ஆகியன இதை அரண் செய்யும். சூறுவளி நாடகத்தில் நட்சத்திரத்தின் செல்வாக்கு பேசப்படுகிறது. ஜூலியசு சீசர் நாடகத்திலும் "நம்மிடமே குற்றம் ; நட்சத்திரத்திடம் இல்லை" என்று கேசியசு கூறுகிறான். பன்னிரண்டாம் இரவு எனும் நாடகத்தில் இதே கருத்து கூறப்படுகிறது. கோமகன் லியர் நாடகத்தில்

இக்கருத்து நயமாக உறுதி செய்யப்படுகிறது. " நட்சத்திரங்களே, மேல் உள்ள நட்சத்திரங்களே, நம் குணத்தை ஆள்கின்றன; இன்றேல் ஒரு கணவனும் மனைவியும் முரண்பட்ட குணமுடைய மக்களைப் பெற முடியாது ".

15. திருமகள் :

திருமகள் ஒருவரிடம் நிலைத்திராள் என்பது தமிழ் நூல் கொள்கை. நிலையில்லாத் திருமகள் என்று கற்ருேர் ஏத்தும் கலித்தொகை கூறுகிறது. சூருவளி நாடகத்திலும் வெனிசு வணிகன் நாடகத்திலும், நீ விரும்பியபடியே எனும் நாடகத்திலும் ஆம்லெட் நாடகத்திலும் கோமகன் நாடகத்திலும் இதே கருத்து காணப்படுகிறது.

16. நன்றி மறவாமை:

" நன்றி மறவேல் " என்பதை அறியாத தமிழர் இரார்; "நன்றி மறப்பது நன்றன்று" என்பது திருக்குறள்; பனிரெண்டாம் இரவு நாடகத்தில் அண்டோனியோவிடம் வயலா பேசும் போது "பொய், போலித்தனம், பித்தலாட்டம், குடிவெறி முதலிய எந்தப் பாவத்தையும் விட நன்றியில்லாக் குணத்தை நான் மிகவும் வெறுக்கிறேன் " எனக் கூறுகிருள். பெற்ற தந்தையிடமே பற்று இன்றி நடக்கும் கோனரிலை, லீயர் கடிந்துரைத்து நன்றிகெட்ட நயவஞ்சகத்தைச் சாடும் காட்சியைக் கோமகன் லீயர் நாடகம் சித்திரிக்கிறது.

17. திருநீக்கப்பட்டார் தொடர்பு :

" இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும், திருநீக்கப் பட்டார் தொடர்பு" என்பது குறள். கோமகன் லீயர் நாடகத்தில் எட்கார் இதையே கூறுகிருன். மதுவை ஆழமாக விரும்பினேன்; சூதை நேசித்தேன்; பெண்போகத்தில் துருக்கியனைத் தோற்கடித்தேன். மனிதரைக் கெடுக்கும் மூன்று அழிவுச் சக்திகள் எனச் சான்ருேர் கூறுவது எங்கும் ஒரு தன்மையன என்பதை இங்குக் கண்டோம்.

18. முடிவுரை:

நிலவும் கதிரவனும் விண்மீனும் இயற்கைக் காட்சிகளும் உலகு எங்கும் உள்ளனபோல உண்மையும் எங்கும் என்றும் சான்ருேரால் ஒரே நிலையிலேதான் உணரப்பட்டது; சேக்சுபியர் கருத்துகள் செந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் உலக ஒருமைப் பாட்டை அருமையாக அரண் செய்கிறது எனலாம்.

மா இறைவன் மாண்பு அலவோ?

[புலவர் கோ. வே. பெருமாள், M.A. B.T. நெல்லை.

(சென்ற இதழ் ௫௪௫ஆம் பக்கத்தொடர்ச்சி)

2. மாமல்லபுரம்

மாமல்ல புரஞ்சென்றேன்; மயக்குவித்த கலைகண்டேன்;
நாவல்ல பல்லவனின் நாகரிக நிலைகண்டேன்!

கரியவுரு யானையொன்று கருங்கல்லாய் நின்றதுவே!
பெரியவுரு அநுகாணப் பேரார்வம் பிறந்ததுவே!

கல்லையே ஆயுங்கால் கவின்யானை தெரியகில்லேன்!
மல்யானை மதிக்குங்கால், மாகல்லின் நினைவில்லேன்!

கண்ணுக்குத் தெரிகின்ற கடல்நீர்தீ காற்றுவானம்
மண்ணுலகப் பொருள்களெலாம் மாவிறைவன் மாண்பலவோ?

3. திருச்செந்தூர்

திருச்செந்தூர் சென்றிருந்தேன்; தெளிந்தகடற்
கரைநின்றேன்; காலை நேரம்,
உருக்காட்டிக் கீழ்கடல்மேல் உயர்ந்தெழுந்தான்
கதிரோன்ஆ! என்னே? காட்சி!
தெருக்காட்டில் திரிந்தஎழில் சிறுவன்தனைத்
தாய்பேணி! மறுநாட் காலை;
செருக்காட்டி, கடமைசெய, செய்யகோலம்
செய்வித்தாள் போலும்! போலும்! 6

கொடுமைபல செய்மூடர் குறும்பறுத்தே
குவலயத்துள் கேடு போக்கி,
கடுமைகொளும் வெயில்வீசிக், 'களைக இருள்'
என்(று)அன்னை விடுத்தாள் போலும்!
படுமோசத் தன்னலத்தார் பாசாங்கு
செய்யிருளைப் பரிந்தே ஓட்டி,
அடுநாசம் விடுவிக்க அழகுசெய்தே
அருளன்னை அனுப்பினளோ? 7

கடற்கரையில் கதிரவனார் எழுந்த காட்சி,
கணக்கற்றோர் கடவுளருள் கண்டார் மாட்சி!
மடற்குவைசால் இலக்கியங்கள் பெற்ற ஆட்சி,
மாநிலத்தில் வாழ்வுக்(கு) உற்ற மீட்சி!!

அடற்புலவர் கலிலியோபோல் உழைப்பு வீழ்ச்சி,
அடைந்திடினும், அறிஞருளம் அடையா தாழ்ச்சி!
விடற்காளை யூரிகாகிரின் உருசிய ஏறே,
விண்வெளியே உலகுருண்டை கண்ட பேறே! 8

உலகுருண்டை கண்டுவிட்ட உருசிய புட்னிக்
உலவிவந்த விந்தையை நாம் வியந்திட் டாலும்,
அலகுருண்ட பொருட்செலவில் அப்பலோ கண்ட
அமெரிக்கர் வானுய்வை ஆர்ந்திட் டாலும்,
பலவுருண்ட அண்டங்கள் வான்பெரு வெளியே
பாங்குறவே இயங்குவன பகர்வதற்(கு) எளிதோ?
இலகுருண்டை வானவெளி இயங்குவ(து) உணர்வார்,
எளிமையிலே, 'ஒருசக்தி இயக்குவ(து)' அறிவார்! 9

நீலக்கடல் மீதுஎழும் நீளும்வெயில்
கதிரவனே! வாராய்! வாராய்!
ஓலமிடும் எளியவர்கள் உழைப்பதற்கே
உன்னொளியைத் தாராய்; தாராய்!
ஞாலமிசை எல்லோரும் நன்முறையில்
வாழுதற்கே நேராய்; நேராய்!
காலமெலாம் உன்கடமை கண்டுயாங்கள்
கண்பெறவே பாராய்; பாராய்! 10

4. இயற்கையும் இறைமையும்

இயற்கையினை எண்ணுகின்றேன்; ஏதோஓர் உள்ளாற்றல்
செயற்கையினை உணர்கின்றேன்; சிந்தித்தேன்;
அஞ்சுகின்றேன்!
அயற்கைபோல் வேறுவேருய் அகிலமெலாம் இயங்கிடினும்
மயற்கைமனம் கடந்துவிட்டால், மாகடவுள் தோன்றிடுமே!

சின்னவொரு கடிகாரம் சீர்நேரம்
சாற்றவைத்த சிந்தையோர்கள், கண்புரியா
மின்சாரப் பொறிகண்டோர், மேதினியோர்
வியக்குவண்ணம் வானொலியே திரைப்படமே
இன்பவூர்தி வானூர்தி இழிந்த அணு
இன்னபல இயங்கவைத்தோர், அனைவோரும்
இன்னதென்றே இயம்பவொணா ஏதோவோர்
இயக்குமாற்றல் உளதென்றார், எங்கணுமே! 12

பொதுநூலக இயக்குநர் கழக நூல்களை வாங்கக்கூடாது என்று 'உள்நோக்கம்' வைத்தே கழக நூல்கட்குக் கட்டளை அனுப்பி அவற்றை வாங்காமல் தட்டிக் கழித்த செய்தி

மாண்புமிகு கல்விஅமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மாவட்ட நூலகங்கட்கு ஆண்டு தோறும் வழங்கும் தொகையில் நான்கில் ஒரு பங்குத் தொகைக்கு அரசே புத்தகங்களை வாங்கி நேராக அவற்றிற்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தனர். அதனால் மாவட்ட நூலகங்களிலே ஒரு சில நல்ல நூல்கள் இடம்பெறும் என்றும் கருதினர். அதன்படி 1974-75க்கு 11 நூருயிர ரூபாவுக்குப் பதிப்பாளர்களிடம் நேராகவே புத்தகங்களை வாங்கி அனுப்பிவைக்கப் போவதாகப் பொதுநூலக இயக்குநரவர்களை யான் பார்க்கச் சென்றிருந்த போது அவர்களும் சொன்னார்கள். அத் திட்டத்தின்கீழ்க் கழக நூல்களும் வாங்கப்படும் என்றும் கூறினார்கள்.

பொதுநூலக இயக்குநரவர்களிடமிருந்து கழகத் தமிழ் நூல்கள் 19க்கும், ஆங்கில நூல்கள் 3 க்கும் 6174/Q/74 நாள் 6-7-74, 6188/Q/74, 6-7-74 ஆகிய இரண்டு கட்டளைகள் 11-7-74 இல் கிடைக்கப்பெற்றன. தமிழ் நூல்கள் ஒவ்வொன்றிலும் 300 படிகளும், ஆங்கில நூல்கள் ஒவ்வொன்றிலும் 100 படிகளும் கட்டளைகளில் குறிக்கப் பெற்றிருந்தன. மொத்தம் 12 மாவட்ட நூலகங்களில் இன்னின்ன நூலகத்திற்குத் தமிழ் நூல்கள் ஒவ்வொன்றிலும் இத்தனை படிகளும், ஆங்கில நூல்கள் ஒவ்வொன்றிலும் இத்தனை படிகளும் நேராக அனுப்பிவைத்துத் தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கட்டளைகளில் குறிக்கப் பெற்றிருந்தன.

மேலும் கட்டளைகளில் பல நிபந்தனைகள் குறிக்கப் பெற்றிருந்தன. அவற்றில் ஐந்து முக்கியமான நிபந்தனைகளை அடியிற் குறிப்பிடுகின்றேன்.

1. நூல்கள் 1970க்குப் பின்வந்த கடைசிப் பதிப்பாக இருத்தல் வேண்டும்.

அவர்கள் அனுப்பிய கட்டளைகளில் மூன்று கழகத் தமிழ் நூல்கள் மட்டுமே இடம்பெறுவனவாக உள்ளன. ஆங்கில நூல்கள் மூன்றும் இடம் பெறுவதற்கில்லை. கட்டளை அனுப்பு

வதற்குமுன் 1970க்குப் பின்னுள்ள வெளியீடுகளுக்கு விலையுடன் பட்டி எழுதி அனுப்புமாறு பதிப்பாளர்களைக் கேட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் பொதுநூலக இயக்குநரவர்களை நேரிற் பலமுறை கண்டபோது அவர்கள் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவுமில்லை; கடிதம் எழுதியனுப்பவுமில்லை.

2. உத்திரவிடப்பட்ட நூல்களின் எண்ணிக்கைகள் உத்தரவில் குறிப்பிட்ட அளவிற்குக் குறைவாக இருப்பின் பொதுநூலக இயக்ககத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும் (இயக்ககம் என்பது அலுவலகம் போலும்)

கட்டளைகளை அனுப்புவதற்கு முன், பதிப்பாளர்கட்கு 1970க்குப் பின்னுள்ள பதிப்புக்களில் 300க்கு மேல் இருப்புள்ள புத்தகங்களை எழுதிக் கேட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் பொதுநூலக இயக்குநர் நேரிற் சொல்லவுமில்லை; எழுதிக் கேட்கவுமில்லை. மாதிரிப் படிகளாக (specimen copies) அனுப்பும்படி கேட்டிருக்கலாம்; அப்படிக் கேட்கவுமில்லை.

3. மொத்தமாக வாங்குவதற்கான நூலகக் கழிவு (Library Discount) விகிதம் 25 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

கழகம் வழக்கமாக நூலகக் கழிவு 20% கொடுத்து வருவது பொதுநூலக இயக்குநருக்கு நன்கு தெரியும். கழக நூல்களின் பொருட்டே மாநகர் நூலக ஆணைக்குழுத் தலைவர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் ''20% கழிவு தரும் புத்தகங்களையும் வாங்கிக் கொள்ளலாம்'' என்று போட்ட தீர்மானப் படியும் பொதுநூலக இயக்குநர் அவர்கட்கு அனுப்பப்பெற்றுள்ளது.

மேலும் 25% கழிவு பற்றிப் பொதுநூலக இயக்குநர் கல்விச் செயலர் மதிப்புக்குரிய கா. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்களிடம் ஒப்புதல் பெருமல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் இசைவு பெற்றுள்ளனர் என்பது கல்விச் செயலர் அவர்கள் என்னிடம் சொன்னதனுல் தெரிய வந்தேன்.

பின் குறிக்கப் பெற்றுள்ள செய்திகளால் பொதுநூலக இயக்குநரும் ஆசிரியர் பெற்ரோர் சங்கத்தின் செயலர் திரு. பொன்னையா முதலியாரும் சேர்ந்தே கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களிடம் 25% கழிவு தரும் நூல்களையே வாங்கிக் கொள்வதற்கு ஒப்புதல் பெற்றுள்ளனர் என்பது தெரியவந்தது.

மேலும் இங்கே பதிப்பாளர்கள் தத்தம் நூல்கட்கு வெவ்வேறு கழிவு விழுக்காடு கொடுத்து வருவதைக் கூற விரும்புகின்றேன்.

கலைக் களஞ்சியத்துக்கு 10% கழிவும், சென்னைப் பல்கலைக் கழக வெளியீடுகட்கு 15% கழிவும், இன்னுஞ் சில பதிப்பாளர்கள் 25% கழிவுக்குக் கூடுதலாகவும் குறைவாகவும் கொடுத்து வருகிறார்கள்.

பொதுநூலக இயக்குநரின் கழிவு பற்றிய நிபந்தனை 30%, 33⅓%, 35% கழிவு கொடுத்து வரும் பதிப்பாளர்கள் கூடுதல் ஊதியம் பெற வாய்ப்பு அளிக்கின்றது.

4. மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நூல்கள் விற்க ஒப்பினால் அதற்கான ஒப்புதலை உத்தரவு நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

11—7—74 இல் கிடைக்கப்பெற்ற கட்டளைகட்கு 18—7—74 இல் விவரமாகக் கழகம் 1970க்குப் பின் வெளியிட்ட நூல்கட்கு, பட்டியும் விலையும் குறிப்பிட்டதோடு கழகம் வழக்கமாகக் கொடுத்து வருகிற நூலகக் கழிவு 20% என்பதையுங் குறிப்பிட்டு மாற்றுக் கட்டளை (Revised Order) அனுப்புமாறு எழுதினேன். அதன்பின் யானும் கழகப் பொதுமேலாளரும் பொதுநூலக இயக்குநரவர்களை அலுவலகத்திலே கண்டு கேட்டபோதெல்லாம் 'எல்லாம் முறையாகக் கவனிக்கப்படும்' என்ற ஒரு தொடரையே மீண்டும் மீண்டும் சொல்லி வந்தனர்.

28—7—74 இல் மாற்றுக் கட்டளை அனுப்புமாறு எழுதிய கடிதத்தோடு இணைப்புக்களைச் சேர்த்து அனுப்பாமல் தனித் தனியே அனுப்பியமையினால் 22-7-74 இல் இணைப்புக்களைச் சேர்த்துக் கடிதம் எழுதி மாற்றுக் கட்டளை அனுப்பும்படி கேட்கப்பட்டது.

28—7—74 இல் கல்வித்துறைத் துணைச் செயலாளர் உயர்திரு. சண்முக சிகாமணி ஐ ஏ. எஸ். அவர்கட்குப் பொது நூலகர்க்கு மாற்றுக் கட்டளை கேட்டு எழுதியதற்குரிய கடிதத்தின் படியுடன் தனிக்கடிதம் எழுதப்பட்டது.

24—9—74 இல் கல்வித்துறைச் செயலர் மதிப்புமிகு கா. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்கட்கும் பொது நூலகர்க்கு மாற்றுக் கட்டளை அனுப்புமாறு எழுதிய கடிதத்தின்படியோடு தனிக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

2—10—74 இல் கல்வித்துறைச் செயலரவர்களைக் கண்ட போது நீங்கள் பொதுநூலக இயக்குநரைத் தரக்குறைவாகப் பேசிவிட்டதாக அவர் தம்மிடம் சொன்னார் என்றும், இன்று கொண்டுவந்து தம்மிடம் காட்டிய கட்டளைப்பட்டியில் கழக நூல்கள் ஒன்றுமில்லை என்றும் கூறினார்கள். அதன்பின்னர் அன்றே 'எப்போது எவர் முன்பு எதற்காகத் தங்களைக் குறைவாகப் பேசினேன்' என்பதுபற்றித் தெரிவிக்கும்படி பொதுநூலக இயக்குநரவர்களைக் கேட்டுக் கடிதம் எழுதினேன். அதற்கு நாளதுவரை அவர்களிடமிருந்து மறுமொழி கிடையாது.

6—7—74 இல் அனுப்பிய கட்டளைகட்குப் பின் பொது நூலகர் எனக்கு 3-12-74 இல் அடியிற் கண்டவாறு எழுதி யனுப்பியது வியப்பையும் வருத்தத்தையும் தந்தது.

> "பார்வை 2 இல் கண்ட தங்கள் கடிதத்தில் குறிப்பிட்ட நூல்கள் கழிவு விகிதம் இவ்வலுவலக ஆணையின் இணைப்பில் கண்ட நிபந்தனை 7 ஐ மீறுவதால் மாவட்ட நூலகங்கட்கு வாங்கப் பிறப்பித்த ஆணை இரத்து செய்யப்படுகிறது"

6—7—74இல் பெற்ற கட்டளைகட்கு யான் 18-7-74இலும் 22-7-74 இலும் மாற்றுக் கட்டளை அனுப்புமாறு கேட்டெழுதிய கடிதங்கட்குப் பொது நூலக இயக்குநர் 5 மாதங்கள் கழித்து 25% கழிவு கொடுப்பதற்கு இணங்காமையால் கட்டளை இரத்து செய்யப்படுகிறது என்று எழுதியதும், நேரிற் சில முறை அவர்களைக் கண்டு கேட்டபோது முறையாகக் கவனிக்கப்படும் என்று சொன்னதும் கழக நூல்களை வாங்கக் கூடாது என்ற அவர்களது உள்நோக்கத்தை நன்கு புலப்படுத்துகின்றனவல்லவா.

3—1—75 இல் கல்வித்துறைச் செயலர் மதிப்புமிகு சி. ஜி. ரங்கபாஷியம் ஐ ஏ. எஸ். அவர்களிடம் பொது நூலக இயக்குநரவர்கள் 25% கழிவு கொடுப்பதற்கிசையாமையால் கட்டளை இரத்து செய்யப்பட்டது என்று எழுதியுள்ள செய்தியினையும், முன்னைய கல்விச் செயலரவர்களிடம் அதற்கு ஒப்புதல் பெறாமல் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களிடம் ஒப்புதல் பெற்ற செய்தியினையும் நேரிலே விளக்கிச் சொன்னேன்.

பின்பு 13-1-75இல் மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களை இல்லத்திலே கண்டு நிலைமையினை விளக்கிக் கூறினேன். அதற்குப் பதிப்பாளர்கள் ஒவ்வொரு வகையான கழிவு கொடுப்பதாகத் தெரியவந்தமையால் ஒரே மாதிரி 25% கழிவு இருத்தல் நலமென்று தாம் கூறியதாகத் தெரிவித்தார்கள். மேலும் குறைந்த கழிவு வழங்குவோரும்

உண்டா என்றும் கேட்டார்கள். அதற்கு யான் 'உண்டு' என்றும் இன்னின்ன பதிப்பாளர் 25%க்குக் குறைவாகவே கழிவு கொடுத்து வருகின்றனர் என்றும் சொன்னேன். பின்னர் அதைப்பற்றி 20—1—75இல் மதிப்புமிகு கல்விச் செயலர் அவர்களிடம் கழகம் இதுகாறும் கொடுத்துவந்த 20% கழிவுக்கு மேல் இனிக் கொடுப்பதானல் எத்தனையோ தொல்லை கட்கு உட்பட வேண்டியிருக்கும் என்று விளக்கிக் கடிதம் எழுதினேன்.

1—2—75இல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கண்டு பேசியபோது 25% கழிவுக்கு ஒத்துக் கொள்ளுமாறு அவர்கள் கூறியதற்கிணங்க இசைந்து 19 நூல்கட்கு விலையுடன் பட்டி எழுதி மாதிரிப் படிகளை நேரிற் கொடுத்தேன். அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு பொது நூலக இயக்குநர்க்கனுப்பிக் கட்டளை அனுப்பச் செய்வதாகச் சொல்லியருளினர்கள்.

அச் செய்தியினை 1—2—75இல் பொது நூலக இயக்குநரவர்கட்கும் 3—2—75இல் மதிப்புமிகு கல்வித்துறைச் செயலரவர்கட்கும் மாதிரிப் படிகளின் பெயர்ப் பட்டியல்களுடன் கடிதம் எழுதியுள்ளேன்.

பொது நூலக இயக்குநரவர்களிடமிருந்து கட்டளை கிடைக்கப் பெருமையால் மீண்டும் 10—3—75இல் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கட்கு நினைவுக் கடிதம் எழுதியனுப்பினேன்.

பின்னர், கழக மேலாளரும் என் மைத்துனரும் ஆகிய திரு ஆ. சுப்பையாபிள்ளை 13—3—75இல் பொது நூலக இயக்குநரவர்களை அலுவலகத்திலே கண்டு கேட்டபோது அவர்கள் இவ்வாண்டில் கழக நூல்களை வாங்குவதற்கில்லை என்றும் அடுத்த ஆண்டில் பார்க்கலாம் என்றும் சொல்லியுள்ளார்கள்.

பொது நூலக இயக்குநர் அனுப்பிய கட்டளையுடன் அனுப்பிய நிபந்தனைகளில் ஒன்ருகிய 'இயக்குநர் தீர்ப்பு' என்ற தலைப்பில்,

5. "மேற்கண்ட நிபந்தனைகள் தொடர்பாக எழும் பிரச்சனைகளில் இயக்குநரின் தீர்ப்பே முடிவானது. மேற்கொண்டு எவ்வித முறையீட்டுக்கும் இடமில்லை"

என்று குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆணையினையும், மதிப்புமிகு கல்விச் செய

லரவர்கள் நல்லெண்ணத்தினையும் புறக்கணித்துத் தமது உள் நோக்கத்தினை நிலைநிறுத்தி விட்டனர் என்பது நன்கு புலப்படு கிறதல்லவா:

தமக்கு மேல் கல்வித்துறைத் துணைச் செயலர், செயலர், அமைச்சர் ஆகியோர் இருக்கும்போது இத்தகைய நிபந்தனை யைத் தமது கட்டளையில் குறிப்பிட்டது பொருந்துமா?

பொது நூலக இயக்குநரவர்களின் தீர்ப்பினை விளக்கி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கட்கு 6—7—74இல் அனுப்பப் பெற்ற கட்டளைகட்குப்பின் உள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் 18—3—75 இல் விளக்கி எழுதினேன்.

அக் கடிதத்தில் மதிப்புமிகு பள்ளிக் கல்வி இயக்குநர் (டி. பி. ஐ.) அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுடைய ஆணையின்படி 12—3—75இல் தொடக்கப் பள்ளிகட்கும் 17—3—75இல் உயர்நிலைப் பள்ளிகட்கும் கழக நூல்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதைக் குறித்துள்ளேன்.

மேலும் மிச்சமிருந்த தொகைக்கும் கழக நூல்களை அவர்கள் வாங்கியதனையும் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்கின்றேன்.


18—3—75இல் நான் கொடுத்த கடிதத்தைத் திரு. பொன்னையா முதலியார்க்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுப்பி விளக்கம் கேட்டிருப்பதாகத் தெரிய வந்தது.

19—3—75இல் திரு பொன்னையா முதலியார் தொலைபேசி வழி என்னைக் கூப்பிட்டுத் தாங்கள் மாண்புமிகு அமைச்சரவர் களிடம் கொடுத்த கடிதம் என்னிடமிருக்கிறதென்றும் இதற் கெல்லாம் அமைச்சரவர்களிடம் போவானேன் என்றும், உங்கள் மருமக்கள்மார்களில் கழகப் பொது மேலாளரையாவது மறை மலையடிகள் நூலகத்தின் நூலகரையாவது என்னிடம் நாளை அனுப்பினல் சொல்லியனுப்புவேன் என்றும் சொன்னார்கள்.

இதிலிருந்து பொது நூலக இயக்குநரும் திரு பொன்னையா முதலியாரும் சேர்ந்தே மாண்புமிகு அமைச்சரவர்களிடம் மாவட்ட நூலகங்கட்கும் தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளி கட்கும் வாங்கப்பெறும் நூல்கட்கு 25% கழிவு தரப்படும் நூல் களையே வாங்குதல் வேண்டு மென்பதற்கு இசைவு பெற்றுள் ளார்கள் என்பது தெளிவாகின்றது.

3—4—75இல் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கட்குப் பொது நூலக இயக்குநரும் திரு. பொன்னையா முதலியாரும் சேர்ந்தே 6—7—74இல் அனுப்பிய கட்டளைகளிற் கண்ட கழக

நூல்களை வாங்கவில்லை என்பது பற்றியும், அதனால் ரூ. 40,000க்குக் கழகப் புத்தக விற்பனை இல்லாது போயிற்று என்பது பற்றியும் அத்தொகை கிடைத்திருப்பின் கழகம் கோத்தரேஜ் பேழை ஒன்றில் வைத்துள்ள (இதிற் காணும் படத்திற் காணப்பெறும் கோப்புகளிலுள்ள) 200க்கு மேற்பட்ட



கையெழுத்துப் படிகளைக் கொண்ட கோப்புகள் உள்ள பேழை

கையெழுத்துப் படிகளில் ஒருசில அச்சிடப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்பது பற்றியும் எழுதியுள்ளேன். மேலும் விற்றுத் தீர்ந்துபோன கழக நூல்களில் ஒருசிலவற்றைத் திரும்ப அச்சிடுவதற்கு உதவியாயிருந்திருக்கும். பின்னர் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களை நேரிற்கண்டு தாங்கள் அனுப்பிய ஆணையின்படி கட்டளை கிடைக்கப் பெறவில்லை என்று சொன்னபோது, "அதன்பின்பு நீங்கள்

பொது நூலகரைப் பார்க்கவில்லையாமே'' என்றார்கள். ஆணையின்படி அவர் கட்டளை அனுப்ப வேண்டுமே தவிர எதற்காக நேரிற் போய்ப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தாலும் பார்க்க வரவில்லை என்றே சொல்லுவார் என்பதும் உறுதி.

அடுத்து 19-4-75 இல் திரு பொன்னையா முதலியாரை அவர்தம் இல்லத்திலே பார்த்துப் பேசச் சென்ற கழகப் பொது மேலாளர் திரு கலியாண சுந்தரத்திடம் அவர் சொன்னதையும், பொதுநூலக இயக்குநர் திரு தில்லைநாயகம் அவர்களை அலுவலகத்திலே பார்த்துப் பேசச் சென்ற நூலகர் திரு முத்துக்குமாரசாமியிடம் அவர்கள் கூறியதையும் அப்படியே மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கட்கு எழுதி அனுப்பினேன்.

20—3—75 காலையில் கழகப் பொதுமேலாளர் திரு பொன்னையா முதலியாரை வீட்டிலே கண்டு பேசியபோது அவர் சொன்னவற்றில் ஒரு பகுதி:

> ''கழக ஆட்சியாளருக்கும் பொதுநூலக இயக்குநருக்கும் மனத்தாங்கல் இருப்பின் நேரிலே பேசி நல்ல முடிவுக்கு வரலாமே'' என்றார். மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு ரூ. 90 மானியம் கொடுக்கலாமென்று அரசுக்குப் பரிந்துரைத்த செய்தி தெரிய வந்ததால் அவரைப் பார்ப்பதில் என்ன பயன் கிடைக்கும் என்று சொன்னதற்குத் திரு முதலியார் 'நூல்நிலையம் வேறு, இது வேறு' என்றார். ''இவ்வாண்டில் புத்தகங்களெல்லாம் வாங்கியாயிற்று. அடுத்த ஆண்டில் கழக நூல்களை வாங்குவது பற்றிக் கவனிக்கலாம்.'' என்றும் கூறினர்.

அன்று பிற்பகல் மறைமலையடிகள் நூல்நிலையத்தின் நூலகர் பொதுநூலக இயக்குநரை அலுவலகத்தில் கண்டு பேசியதில் ஒரு பகுதி.

> ''மாண்புமிகு கல்வி அமைச்சர், அவர்கள் கழக நூல்களை வாங்கும்படி மாதிரிப் படிகளுடன் அனுப்பிய ஆணைக்கு இதுவரை கட்டளை வரவில்லையே என்று கேட்டதற்கு அது பற்றித் தமக்கு நேரிடைக் கடிதம் கிடையாது. அமைச்சருக்கோ செயலருக்கோ கடிதம் அனுப்பிவிட்டுத் தமக்கு அதன் நகலை அனுப்பியிருந்தால் உரியவர்கள் ஆணைவந்தால்தான் தாம் எதுவும் செய்ய முடியுமென்றும் தமக்கு வந்த நகல் கடிதத்தை வைத்து எதுவும் செய்ய முடியா'' தென்றும் கூறினர். பிறகு ''என்னைப் பொறுத்தவரை

கல்வி அமைச்சர், கல்விச் செயலர் எது சொன்னாலும் அதைச் செய்ய வேண்டியவன் நான்'' என்றுங் கூறினர்.

''நீங்கள் நூலகர் என்ற முறையில் வந்தீர்களா அல்லது கம்பெனிச் சார்பில் வந்தீர்களா என்று தெரியவில்லை. நூலகர் என்ற முறையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கம்பெனிச் சார்பில் என்றால் அடுத்த ஆண்டில் புதிய ஆர்டருக்கு வழி பார்ப்போம்.''

''ஆட்சியாளர்தாம் நான் இயக்குநரானதற்குக் காரணம் என்று சொல்லுகிறார்களாம். அவர்கட்கே அந்தப் பெருமை சேரட்டும். நீங்கள் எந்தப் பொறுப்பில் வந்தாலுஞ் சரி; நான் இங்குப் பேசியதை வெளியே சொன்னால் நான் சொல்லவுமில்லை; அவரைச் சந்திக்கவுமில்லை என்று சொல்லுவேன்.''

தமிழ் சைவம் இவ்விரண்டுக்கும் தொண்டு செய்யும் பொருட்டு 21—9—1920 இல் ''சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மட்டிட்டது'' என்ற கூட்டுப்பங்கு நிறுவனம் என் அருமைத் தமையனர் அவர்களால் நிறுவப்பட்டது. யான் தொடக்க காலமுதல் இன்றுகாறும் அதனை நடத்தி வருகின்றேன். இதுகாறும் பல துறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 1565 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. அத்தனை நூல்களும் என் பார்வையிலே வெளிவந்திருக்கின்றன. சென்னை, நெல்லை, பல்லாவரம் ஆகிய இடங்களில் கழகம் நடத்தி வரும் மூன்று நூல்நிலையங்கள் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்பட்டு வருகின்றன. உலகில் எந்தப் பதிப்பு நிறுவனமும் கட்டணமில்லாமல் நூல்நிலையங்களை நடத்துவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

''செந்தமிழ்ச் செல்வி'' என்னும் திங்கள் இதழ் 49 ஆண்டுகளாகத் தமிழ், தமிழினம், தமிழ்நாடு இவற்றின் முன்னேற்றங் கருதி நடைபெற்று வருகிறது. என்மீது பகை கொண்டு எனக்குத் தீங்கு செய்யினும் அதனைப் பொறுத்துக் கொள்வேன். யான் எனது உயிராகக் கருதிவரும் கழகத்துக்குத் தீங்கு செய்யின் எவ்வாறு பொறுத்துக் கொள்வது.

எனது சீரிய தமிழ்த் தொண்டினைக் கருதியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக அரசை 1967 இல் ஏற்று நடத்திய காலஞ் சென்ற முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எனக்கு ''பத்மஸ்ரீ'' (தாமரைச் செல்வர்)

என்ற பட்டத்தை வழங்குமாறு நடுவணரசுக்குப் பரிந்துரைத்த தன்படி 1969 இல் அதனை ஏற்றுக்கொண்டேன்.

24—8—1958 இல் சென்னை இலிங்கிச் செட்டித் தெரு 105 ஆம் எண் கட்டிடத்தில் 'மறைமலையடிகள் நூல்நிலையம்' திறக்கப் பெற்ற விழாவிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதில் ஒரு சிறு குறிப்பு :

"சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலுள்ள என் நண்பர் சுப்பையா அவர்கள் மறைமலையடிகள் பெயரால் ஏற்பாடு செய்துள்ள இந்தப் படிப்பகம் மறைமலையடிகளின் கருத்துக்களை அறிந்து தமிழர்கள் நல்ல பயன் பெறுவதற்கு உபயோகப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இன்று இரண்டாயிர ரூபா எடுத்துக்கொண்டு போனால் கழகத்தில் நல்ல நூல் களை வாங்கலாம்."

சட்டமன்ற உறுப்பினர்களாயிருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மாண்பு மிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியனவர்களும் 2—12—1965 இல் மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்வை யிட்டு வழங்கிய பாராட்டுரைகளைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பாராட்டுரையில் ஒரு பகுதி :

"பெரியவர் திரு சுப்பையா பிள்ளை அவர்கள் தம் பெரு முயற்சியும் தமிழார்வமும் சென்னையில் மறை மலையடிகளார் நூல்நிலையமாக உருப் பெற்றுத் திகழ் கின்றது. தமிழ்க் கருவூலம்—அறிவுப் பூங்கா—வர லாற்றுப் பொழில்—இந்த நூலகம் எனில் மிகை யாகாது. இதனைக் காணும்பொழுது உள்ளத்தில் ஊறுகின்ற தமிழ் உணர்ச்சி என்னென்பேன்! எத்தனை புலவர்கள்—எத்தனை விழுமிய கருத்துக் கள்—ஜி. யு. போப் போன்ற சான்றோர்களின் தமிழார்வம் பெருக்கெடுக்கும் நெஞ்சத்தை எடுத்துக் காட்டும் பழைய ஏட்டுச் சுவடிகள்.

நேரம் போதவில்லை. இனியும் வருவேன்."

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியனவர்கள் பாராட்டுரையில் ஒரு பகுதி:

"மறைமலையடிகளார் திரட்டி வைத்திருந்த நூல் களோடு கிடைத்தற்கரிய வேறு பல நூல்களையும்

திரட்டி "மறைமலையடிகள் நூல் நிலையம்" என்ற பெயரில் சிறந்த நூல்நிலையத்தைத் திறக்க முன் வந்து அதில் வெற்றி கண்ட திரு சுப்பையா பிள்ளை அவர்கள் பாராட்டுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரிய வராவார்கள். நூல் நிலையம் மேன்மேலும் வளர்ந்து அதிகப் புகழோடு என்றென்றும் நிலைபெற்று நிற்கத்தக்க வகையில் அரசினரின் அரவணைப்பும் உதவியும் என்றென்றும் இருக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கழகத் திருவள்ளுவர் விழாவிலும் ஆட்சியாளர் பவள விழாவிலும் கலந்து பாராட்டுரை வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சென்னையில் வள்ளலார் திருவருள் மண்டபத்தையும், நெல்லையில் கழகத்தை நிறுவிய திருவரங்கனுர் பெயரிலுள்ள கழகப் புத்தக விற்பனை நிலையத்தையும் திறந்து வைத்தனர். இவையேயன்றிக் கழகம் நடத்திய பல பெருவிழாக்களில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கியுள்ளனர். அவர்கள் கழக வளர்ச்சிக்குத் தம்மாலான உதவிகளை உள்ள உவகையோடு எப்போதும் செய்யக் கருதுபவர்.

எனவே அவர்கள் கல்வித்துறை அமைச்சராக இருக்குங் காலத்தில் அவர்கள் கருத்துக்கு மாருகப் பொதுநூலக இயக்கு நரும், திரு பொன்னையா முதலியாரும் சேர்ந்து செய்துள்ள கேட்டினை விளக்க வேண்டியது முதன்மையாயிற்று. மிகை எனின் பொறுத்தருளும்படி பணிவன்போடு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறைப் பணியினின்றும் ஓய்வு பெற்றபின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக அமர்த்தப் பெற்றுள்ள திரு பொன்னையா முதலியாரைப் பற்றிய முன்னுள் நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன். அவர் மதுரை மாவட்டக் கழகக் கல்வி அதிகாரியாயிருந்தபோது கொடுமை தாங்காமல் ஆசிரியர் ஒருவரால் அடிபட்டதும், கோயில்பட்டி வட்டார வளர்ச்சித் துறை அதிகாரியாகவிருந்த போது தம் கீழ்ப் பணியாற்றுபவர் ஒருவரால் தமது முகத்தில் திராவகம் (acid) ஊற்றப் பெற்றதும் பள்ளிக் கல்வியுலகு மறந் திருக்க முடியாது.

வ. சு.

———

இறைவிப்பித்தன் காவியம்

அல்லது

அபிராமிபட்டர் புராணம்

[ஆசிரியர் 'அடியன் மணிவாசகன்']

(முன் இதழ் ருoo ஆம் பக்கத் தொடர்ச்சி)

50. பட்டமரம் தளிர்த்திடுமோ ? காய்ந்து கேணி
பாழானுல் நீர்தருமோ வெட்டப் பட்ட
மொட்டைமரம் பொலிவுறுமோ ? வானத் திங்கள்
முடிந்துவிட்டால் ஒளிதருமோ மலர்ந்த பூக்கள்
தொட்டபின்னே அயலுறுமோ ? புளிய ஓடும்
தொங்கிவிட்டால் ஒட்டிடுமோ ? சுட்ட சட்டி
விட்டபின்னே உருவாமோ சீச்சீ ! இந்த
வியனுலகை யார்படைத்தார் ? வெட்கம் ! வெட்கம் !!

51. நொண்டிகளை யூனர்களைச் செவிடர் தம்மை
நோக்கில்லா மண்டைகளை யூமர் தம்மைக்
கிண்டிவளர் நோய்கள்பல குத்திக் குத்திக்
கிறுகிறுக்கச் சாவோரின் துன்பந் தன்னைப்
பண்டிருந்த வினையென்னும் கொள்கை யின்னும்
பாழாய்த்தான் போகாமல் செய்யும் தாழ்மை
கொண்டிருக்கப் பார்ப்பதுவோ ? சீச்சீ ! இந்தக்
குறையுலகை யார்படைத்தார் ? வெட்கம் ! வெட்கம் !!

52. பெண்ணென்றும் ஆணென்றும் அளவில் யாக்கை
படைத்ததனுற் பொறுக்காமல் வலித்துச் சோரும்
மண்ணின்கண் நெளிகின்ற மக்கள் வாழ்வை
மடமையிலும் அறிவினிலும் மாற்றி வைத்தும்
பெண்ணுருவில் சிலவுருவை அழகே யின்றிப்
பேதுறவே அழவிட்டுக் கொடுமை வைத்தும்
தண்மையின்றி விளையாடும் சிறுவன் போலத்
தரையினையார் படைத்ததுவோ ? சீச்சீ ! வெட்கம் !

53. காட்சிக்கே எளிதான இந்த வையம்
கண்டதனுல் இவைகூறி வெறுத்துத் தேவி
ஆட்சிக்கே நெஞ்சவழி திறந்து வைத்தே
அவள்கனிந்த சுவைபருகிப் பித்த ணுகி
மாட்சிக்கே தவமிருந்த கோலங் காட்டி
மணங்கமழும் சொற்பிதற்றி மண்ணிற் சென்ருன்
காட்சியினை யிவ்வுலகம் காண வில்லை
கண்ணழிந்தே பேசுமையோ துன்பம் துன்பம் !

54. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்ற மில்லை
கோழைகளாய்த் திரிகின்ற குறையு மில்லை
மடிப்பிறந்தார் செய்கின்ற மாசு மில்லை
மா நாட்டைக் கெடுக்கின்ற காசு மில்லை
தொடிப்பிறந்தார் பிழைக்கின்ற கயமை யில்லை
தோய்ந்திடுவார் சுமக்கின்ற துன்ப மில்லை
அடிப்பிறந்தான் தெய்வத்தின் அன்பைப் பெற்ருன்
ஆர்வத்திற் பிழையுண்டோ? உலகே! சொல்வாய்.

55. கையினிலே கோலிருந்தா லென்ன? ஆடை
கறைபடிந்தே கிழிந்திருந்தா லென்ன செய்ய
மெய்யினிலே பொடிபடிந்தா லென்ன வாய்தான்
மெல்லுகின்ற சொல்லானல் என்ன குஞ்சி
வெய்யிலென விரிந்திருந்தா லென்ன நெற்றி
வியர்வழியக் குளித்திருந்தா லென்ன வாய்மை
பொய்யினிலே மறைந்திடுமோ? ஐயா! இந்தப்
பொன்கதிரை நாய்குரைக்கக் கேட்பீர் அந்தோ!

(ஊரவர் பித்தன் என்றல்)

56. "ஊனினையே யுண்கின்ற பித்தா! எங்கள்
உயர்வாழ்க்கை விட்டவனே பித்தா! காட்டுத்
தேனினையே குடிக்கின்ற பித்தா! நாட்டுத்
தெருவெல்லாம் திரிகின்ற பித்தா! தேவி
மானினையே தேடுகின்ற பித்தா! இன்ப
மகிழ்ச்சியிலே அலைகின்ற பித்தா!" என்றே
வானுயர்ந்த வர்போல நாளும் ஏசி
வாழ்கின்ற வர்தம்மை யென்ன சொல்ல?

57. பனிக்குண்டோ வெயிலணைக்கு மாற்றல்? கையின்
பறைக்குண்டோ இடிதடுக்கு மாற்றல் கோலின்
நுனிக்குண்டோ இரும்பழிக்கு மாற்றல் ஆட்டின்
நுதற்குண்டோ திங்களொளி காட்டல் எட்டிக்
கனிக்குண்டோ நாவின்ப மூட்டல் கீழின்
கறைக்குண்டோ இறைகண்டு நாட்டல் என்று
முனிதற்கோ மனமின்றி நொந்து மற்ருேர்
முக்கூடல் வழிவந்து மேலும் செல்வான்.

58. காக்கையினும் கீழாக எத்திக் கொத்திக்
கருத்தெல்லாம் தன்னலத்தில் பிழைக்கும் அன்ருேர்
ஆக்கையினைப் பேணிடுவார் அறத்தைப் பேணுர்
அகமிருக்கும் ஆற்றலினை ஓரார் காணுர்

போக்கையெலாம் கண்டுகண்டே அருளைக் காட்டிப்
போகின்ருன் அபிராமிக் கோவில்! அங்கே
மூக்குவழித் தவமிருந்து வேட்கை காட்டி
முடிவில்லா இன்பத்தைப் பருகக் காண்பீர்!

59. காலத்தை வெல்கின்ற புலவன் கோளாம்
கடுவெளியிற் சுழன்ருேடி நிமிர்ந்து வந்தே
ஞாலத்தை நெஞ்சேந்திச் சிந்தைக் கற்கள்
நட்டதிலே பெருங்கோவில் எழுப்பி யேழை
ஓலத்தை மந்திரமாய் ஓதி நாளும்
உயிர்போற்றும் வழிபாட்டைக் காணு மாப்போல்
கோலத்தைச் செய்கோவில் இறைவி கோவில்
கொள்கைக்கோர் அணிசெய்து திகழும் இங்கே.

(கோபுர வியப்பு)

60. மூடாத வொருதெய்வ அழகோ இன்பம்
முட்டாத வொருகலையின் துடிப்போ என்றும்
வாடாத அறிவுமண மலரோ தெய்வம்
வரவைத்த கோபுரந்தான் படியோ அன்பர்
தேடாதே முன்கிடைத்த வைப்போ பொய்மைத்
தெறுதற்கு வைத்திட்ட விளக்கோ மன்னி
ஓடாதே நின்றிருக்கும் தேரோ! வென்றே
ஓடிவந்தே கண்டுருகி யார்த்து நிற்பான்.

61. தோள்தட்டி யாடிடுவான் கைகள் கொட்டித்
தொடுதொடென எவ்விடுவான் உயரம் நோக்கித்
தாள்தட்டி வீழ்ந்திடுவான் எழுந்து நிற்பான்
தன்னேடே பேசிடுவான் துடித்துப் போவான்
வாள்கொட்டும் பொம்மைதனைச் சிரிக்கு மென்றே
வாயூறி யேங்கிடுவான் அள்ளும் உள்ளம்
தேள்கொட்டித் துள்ளிடுமோ? அன்பன் துள்ளித்
தேவியருள் நினைந்திடுவான் களித்துச் சோர்வான்

சூ. இறைவி வழிபாடு

(கோவில்)

62. நிறம்விளையும் பாத்திகளை வானங் காட்டும்
நெஞ்சுவிளை பாத்திகளை மானங் காட்டும்
மறம்விளையும் பாத்திகளை நேர்மை காட்டும்
மாண்புவிளை பாத்திகளைக் கூர்மை காட்டும்

புறம்விளையும் பாத்திகளை உடம்பு காட்டும்
புகழ்விளையும் பாத்திகளைத் தொண்டு காட்டும்
அறம்விளையும் பாத்திகளை அன்பு காட்டும்
அருள்விளையும் பாத்திகளைக் கோவில் காட்டும்!

63. வையத்தைப் பொழிலென்றும் அதிலே பூத்த
வண்ணமலர் உயிரென்றும் சொன்னார் இங்கே
வையத்தைப் படைப்பவளைத் தொழுதல் வேண்டி
வகைவகையாய் அணிகள்பல செய்து பூட்டி
உய்யத்தான் கண்கோடி காண வைக்கும்
ஒருவல்லான் பொன்னுலையின் கலன்கள் மேவும்
துய்யவொளி அங்காடி போலப் பூக்கள்
துதைந்தபொழில் திருச்சுற்று முகிலை முட்டும்!

64. தங்கரளிக் குழைகொன்றைக் காசு மாலை
தகதகக்கும் செம்பரத்தைப் பதக்கம் முல்லை
பொங்கரும்புக் கொடிமாலை நந்தி வட்டப்
போதுகளாம் தோடுபல மார்பின் ஆரச்
செங்கெழுநீர்க் கண்டிபல குவளைக் கண்கள்
செவ்வந்திப் பூஞ்சுட்டி புன்னை மொட்டின்
தங்கொளியாம் மூக்குத்தி யெல்லாம் பூட்டித்
தனியம்மை நிற்பதுபோல் பொலியும் பூங்கா!

65. பூங்காவின் நிழல்பேசும் ஆடி போலப்
பொய்யாத பொய்கையிதிற் பொலியும் விண்ணில்
தேங்காத நீரெல்லாம் தேங்கும் தேவி
தெவிட்டாத அருளெல்லாம் பருக வந்தே
ஏங்காத வுயிரெல்லாம் ஏங்கிக் கண்கள்
எதிர்பெய்து நிற்கின்ற இடந்தா னீதோ!
பாங்காக அவள்தோன்றிப் பரிவு காட்டிப்
பாருயரச் சிரிப்புமிழும் படந்தா னீதோ!

66. ஊன்தோன்றி யுயிர்தோன்றி யின்பத் துன்ப
ஒட்டுக்கள் தோன்றுமுள வுயர்வைப் போல
வான்தோன்றி நிற்கின்ற மதிலிற் காதல்
வாழ்கின்ற மணிப்புறவும் கிள்ளை தானும்
தேன்தோன்றும் திங்களிலே மூழ்கும் நல்லார்
திளைப்பைப்போல் இன்புற்றுத் தெளிந்து நோக்கிக்
கான்தோன்றுந் தவம்போலச் செய்யுஞ் செவ்வி
கண்டுவிட்டால் மனிதனுக்கும் வறுமை யுண்டோ?

(தொடரும்)

ஆட்சிமொழித் துணுக்குகள்

[கீ. இராமலிங்கனர், எம். ஏ.,

உறுப்பினர், தமிழக அரசின் ஆட்சிமொழிக் குழு.]

(சிலம்பு சக, பரல் ஏ, பக்கம் நசுறுன் தொடர்ச்சி)

(2) &, & Son, & Brother

'&' :—இஃது எந்த மொழிக்கும் தனியே உரியது அன்று. எந்த மொழிச் சொல்லும் அன்று. ஓர் அடையாளமே. இதை எந்த மொழியிலும் பயன்படுத்தலாம் என்னும் செய்திகள், துணுக்கு (1)-ல் விளக்கப் பெற்றன.

தமிழிலும், '&'—இந்த அடையாளத்தை, 'அண்டு', 'அன்' என்று உச்சரிப்பது, இயல்பாக அமைகிறது என்பதும், முன்பு கூறப்பெற்றது.

ஆங்கிலத்தில் '&'—ஐ இடும் இடங்கள் எல்லாவற்றிலும் தமிழிலும் '&'—ஐ இட்டு எழுதலாம். 'And'—க்கு வாலாயமாகச் சொல்லும், 'மற்றும்' என்னும் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தவேண்டிய தேவையில்லை.

'Agriculture & Industries' என்பதை 'வேளாண்மை & தொழில்' என்று சுருக்கமாகச் சொன்னால் சாலும். 'வேளாண்மை மற்றும் தொழில்' என்று நீளமாகக் கூற வேண்டியதில்லை.

நிதி & செட்டியல் (Finance & Economics) துறையில், Evaluation & Applied Research என்னும் ஆங்கிலத்தொடரை, 'திறனாய்கை & பயனியல் ஆராய்ச்சி' என்று தமிழில் எழுதுவது எவ்வளவு பொருத்தமாகவும் அழகாகவும் அமைகிறது என்று, என் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய, அத்துறை அலுவலராம் நண்பர் திரு. சிதம்பரம் அவர்கள், பாராட்டி அமைத்துக் கொள்ளும் அவரது தமிழுணர்வை எவரும் போற்றி மகிழாமல் இருக்க முடியாது.

இவ்வாறாக, பெரும்பாலான இடங்களில், ஆங்கிலத்தில் வரும் '&'—ஐத் தமிழிலும் அப்படியே '&' என்றே அமைத்துக் கொள்வது பொருத்தமும், சுருக்கமும் ஆகும்.

'& son'—ஐ, '& மைந்தர்' எனலாம். '& sons' என்று வரும் இடத்திலும், '& மைந்தர்'—என்பதே போதும்.

முதலிடத்தில் 'மரியாதைப் பன்மை'யாகவும், இரண்டாமிடத்தில் 'பன்மை'யாகவும் கொள்ளலாம்.

'& Brother—ஐ, '& தோன்றல் எனலாம். '& Brothers'—க்கு '& தோன்றலர்' என்று கூறலாம்.

'&' சேர்க்காமல், 'Murugan son', 'Murugan sons' என்று கூறுகையில், 'முருகன் மைந்தர்' என்னும் தொடரே சாலும். இரண்டுக்கும் வேறுபாடு காட்டவேண்டும் என்று விரும்பினால், 'முருகன் மைந்தர்' 'முருகன் மைந்தர்கள்' என்று சொல்லிக் கொள்ளலாம்.

இங்ஙனமே, 'Murugan Brother', 'Murugan Brothers' என்பவற்றிற்கு 'முருகன் தோன்றல்', 'முருகன் தோன்றலர்' என்று அமைக்கலாம்.

தமிழகத்திலே பெயர்ப் பலகைகளெல்லாம் தமிழில் எழுதப் பெறுவதற்குத் தனிமுயற்சி தேவை

'ஆட்சி மொழித் நுணுக்குகள்' என்ற மேலே குறிப்பிட்ட கட்டுரையினை எழுதியுள்ள ஆட்சிமொழிக் காவலர் உயர்திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ., அவர்களிடம் யான் சில ஆண்டுகட்கு முன் பெயர்ப் பலகைகளில் காணப் பெறும் சொற்களையெல்லாங் கூடுமானவரை தொகுத்துக் கொடுத்த பட்டி ஒன்று இருக்கிறது.

அவர்களைக் கொண்டு அதனை நிறைவு செய்து நூலாக அச்சிட்டு அதனை வெளியிடுவதற்குத் தமிழகவரசு தக்க உதவி புரிதல் வேண்டும். ஊராட்சி மன்றங்கட்கும், நகரவைகட்கும்,மாநகரவைகட்கும் அதனை அனுப்பி ஆங்காங்கேயுள்ள பெயர்ப் பலகைகளெல்லாம் தமிழில் எழுதப் பெறுவதற்குத் தமிழகவரசு ஆணையிட்டு வழிவகைகளைச் செய்தல் வேண்டும்.

அங்கொருவர் இங்கொருவர் பெயர்ப் பலகைகளெல்லாம் தமிழில் எழுதப் பெறுவதற்குச் செய்துவரும் முயற்சி நல்ல பயன் தராது.

வ. சு.

செய்திகளும் குறிப்புகளும்

டாக்டர் தெ. பொ. மீ. அவர்களுக்குச் சாகித்திய அகாதெமி விருது

பல்கலைச் செல்வர் டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரம் அவர்களுக்குச் சாகித்திய அகாதெமியார் அவ் அகாதெமியின் சிறப்பு உறுப்பினராகும் விருதை வழங்கியுள்ளனர்.

5—7—75 அன்று செ. மா. நூல்நிலையத்தில் நடைபெற்ற விருதளிப்புப் பாராட்டு விழாவிற்குத் திரு. கே. ஆர். சீனிவாசய்யங்கார் தலைமை தாங்கினர். அறிஞர் பலர் தெ. பொ. மீ. அவர்களின் பல பணிகளைப் பாராட்டிப் பேசியபின் அதற்கு நன்றி கூறுகையில் 'தாம் இன்னும் மாணவனுகவே இருப்பதாக' அவர் குறிப்பிட்டார். அகாதெமியின் சென்னைக் கிளையின் சார்பில் திரு. தம்பி சீனிவாசன் அனைவரையும் வரவேற்றுர்.

'ஆரிய பட்டா' செயற்கைக்கோள்

இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான 'ஆரியபட்டா' இந்திய அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்டு ருசியநாட்டு விண்வெளி நிலையத்திலிருந்து இவ்வாண்டு ஏப்ரல் 19 ஆம் நாள் வலுவான ஏவுகணையால் விண்வெளியில் உந்தப்பட்டது.

விண்வெளி ஆய்விற்குச் செயற்கைக் கோளனுப்பும் 9 ஆம் நாடாக இந்தியா இடம் பெற்றுள்ளது.

26 பட்டை முகப்புக் கொண்ட இக் கோள் 360 கிலோ எடையுள்ளது. 564 கி. மீ. முதல் 623 கி. மீ. உயரம் வரையில் இஃது உலகைச் சுற்றுகிறது. 96·41 நிமிடங்களுக்கு ஒருமுறை இஃது உலகை வலம் வருகிறது. ஒருநாளில் 16 முறை உலகைச் சுற்றும்.

இந்திய அறிவியல் அறிஞர்களின் பெருவெற்றிக்குக் காரணமாயுள்ள இக் கோளுக்கு கி. பி. 476 இல் தோன்றிய இந்திய வானியல் அறிஞர் ஆரியபட்டரின் பெயரே சூட்டப் பெற்றுள்ளது. கணக்கிலும் அவர் வல்லவர். அவரே 'சுழி' (O) யின் பெருமையை உலகுக் குணர்த்தியவர்.

விண்வெளியில் பாயும் எக்ஸ் கதிர்களின் வீச்சு, சூரியனிலிருந்து வெளிவரும் காமா கதிர்வீச்சு, அயன்மண்டலத்திலுள்ள வெப்பத்திறன் ஆகிய மூன்றையும் ஆராய்ச்சி செய்து தன் ஆய்வை அவ்வப்போது நாடாப் பதிவில் பதிவு செய்து கொள்கிறது. இந்தியாவின்மேல் பறக்கும்போது அதைக் கட்டுப்படுத்தும் 'சிரிகரிக் கோட்டை' செயற்கைக்கோள் நிலையத்திற்கு ஐந்து அல்லது எட்டு நிமிடங்களுக்குள் செய்திகள் அனைத்தையும் அனுப்புகிறது.

இதன் அடிப்பக்கத்தில் ஆறு கலங்களில் சேமிக்கப் பெற்று வைத்துள்ள 'நைட்ரசன்' காற்ருல் இது செலுத்தப்பெறுகின்றது. ஆறு திங்கள்வரை உலகைச் செம்மையான முறையில் சுற்றும்.

'ஆரியபட்டா' வில் உள்ள திறன்வாய்ந்த படக்கருவிகள் இந்தியக் கனிவளத்தையும் பயிர் வளத்தையும் கண்டுபிடிக்க உதவும் வகையில் படமெடுக்கும். மிகுதொலைச் செய்திப் பரிமாற்றம், வானிலை முன்னறிவிப்புப் போன்றவற்றுக்கு உதவும் வகையில் சிலசோதனைகளை இக் கோள் செய்து வருகின்றது.

இந்தி ஒரு தொடர்பு மொழி

17—5—75இல் புதுதில்லியில் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அமத் அவர்கள் சியாமவுந்தர் நூற்றாண்டு விழாவிலே "இந்தியாவிலே பலவேறு மொழியாளர்களிடையே ஏற்படுத்த வேண்டிய ஒற்றுமைக்கு இந்தியை ஒரு தொடர்பு மொழியாக்க வேண்டியது முதன்மையாகும். சியாமவுந்தர் இந்தியில் தொழில் நுட்பக் கல்விக்குரிய சொற்களை உருவாக்குவதில் பெரிதும் முயன்று வந்தவர். இந்திய மக்கள் வெளி நாடுகட்குச் செல்லும்போது அங்கெல்லாம் ஒருவருக்கொருவர் இந்திய மொழியிலேயே பேசுதல் வேண்டு"மென்றனர்.

இந்தக் கூட்டத்திற்கு நடுவணரசு பயிர்த்தொழிற்றுறை அமைச்சர் மாண்புமிகு ஜகஜீவன்ராம் வந்திருந்தனர். அந்த விழாவுக்கு இந்திரா காந்தி அனுப்பிய செய்தியில் "மக்களிடையே இந்தி மொழியையும், இந்திய இலக்கியங்களையும் பரப்புவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்தல் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிறகு ஜகஜீவன்ராம் பேசியபோது ஆங்கிலம் இன்னும் இந்தியாவிலே அறவே நீங்கவில்லையென்றும் இந்திமொழிதான் ஒருவர்க்கொருவர் பேசும் மொழியாக அமைதல் வேண்டுமென்றும் கூறினர். ஆங்கிலத்தை அறவே தாக்கி எறிந்துவிட்டால் ஒழிய இந்தி எத்துணை ஆற்றலைப் பெற்றபோதிலும் அது பெற வேண்டிய இடத்தைப் பெற முடியாது என்றார். மேலும் அவர், "இந்தியில் பிற மொழியாளர்களெல்லாம் அவரவர்கள் மொழிகளிலேதான் பேசுகின்றனர். அவற்றை விட்டுவிட அவர்கள் விரும்பாதவரை அரசு கொண்டு வந்திருக்கும் இந்தி மொழி அது பெறவேண்டிய இடத்தைப் பெறமுடியாது. உரிய காலத்திலே அந்தத் தவறான போக்கினை நீக்குதற்கு முயலுதல் வேண்டும் என்றார். கூட்டத்திற்கு வந்திருந்த கல்வி அமைச்சர் நாருள ஆசன் "இந்திய நாட்டில் இந்தி பேசாத மக்கள் இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பெருமுயற்சி செய்து வருகின்றனர். எனினும் தமிழ் நாடும், வங்காளமும் ஒரு காலத்தில் இந்தியைக் கற்பதற்குப் பெருமுயற்சி செய்துவந்தன. ஆனால், இப்போது அந்தக் கருத்து முற்றிலும் எதிர்மாறாகப் போய்விட்டது" என்றனர்.

(இந்து) (Hindu) *18—5—75*

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய பணிகள்

பேரறிஞர் அண்ணா அவர்களின் பேராதரவுடன் 1970இல் தொடங்கப்பெற்ற இந்நிறுவனம் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுவதற்குவேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

தமிழ் தெரியாத வெளிநாட்டினர்க்குத் தமிழை முறையாகக் கற்பிப்பதற்கு 'மொழிக் கருவிக்கூடம்' ஒன்றை அமைத்து 5 வெளி நாட்டினர்க்கும் 4 பிற மொழியாளர்கட்கும் தமிழ் கற்பித்துள்ளது. தமிழ் ஆய்வு பற்றிய ஆங்கிலம், தமிழ்க் கட்டுரைகள் கொண்ட தமிழியல் இதழ் ஒன்றை ஆங்கிலத்தில் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு அதன் ஆட்சிப் பொறுப்பை **டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்** அவர்கள் மேற்கொண்டபின் திங்கள்தோறும் 'தமிழ் இலக்கியம் காட்டும் இலக்கியக் கொள்கைகள்' என்ற தலைப்பில் பல்வேறு அறிஞர்களைக் கொண்டு ஆய்வுரை நிகழ்த்தச் செய்து வருகிறார்.

இவ்வாண்டு 'ஆராய்ச்சி நெறி முறைகள்' பற்றிய கருத்தரங் கொன்றையும் சிறப்பாக நடத்தியுள்ளார்.

அண்மையில் இந் நிறுவனத்தின் சார்பில் அவர் நான்கு சிறந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்மொழியில் ஆங்காங்கு வழங்கிவரும் விடுகதைகளின் தொகுப்பான 'தமிழில் விடுகதைகள்' பல்வேறு ஆங்கில இதழ்களில் வெளிவந்த தமிழ் ஆய்வுக் கட்டுரைகளின் பட்டியலான 'Tamil Research through the Journals' கருத்தரங்குக் கட்டுரைகளான 'ஆராய்ச்சி நெறி முறைகள்', பிறமொழியாளர்கட்குத் தமிழ் பயிற்ற உதவும் 'A course in modern standard Tamil' ஆகிய இவை தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுபவையாம்.

பிற மொழியாளர்கள் தமிழை எளிதில் பயில்வதற்கு அவரவர் மொழியில் அஞ்சல்வழித் தமிழ் கற்றுத்தரும் திட்டத்தை மிக விரைவில் இந் நிறுவனம் தொடங்கவிருக்கின்றது.

இவ்வாண்டு மேலுமிரு கருத்தரங்குகளை நடத்தவும், வேறு சில புதிய நூல்களை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

சிலம்புச் செல்வருக்கு 70 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் 70ஆம் ஆண்டுப் பிறந்த நாள் விழா மயிலை கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 27—6—75 அன்று நடைபெற்றது. விழாவையொட்டிச் சிலம்புச் செல்வரின் பல்வேறு பணிகளை எடுத்துரைக்கும் பட்டிமன்றம் நடைபெற்றது. தமிழக அமைச்சர் மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற அப் பட்டிமன்றத்தில் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டு நல்வழி நிலையத்தினர் சிலம்புச் செல்வருக்குச் 'செந்தமிழ்க் கடல்' என்ற பட்டத்தை அவ் விழாவில் வழங்கினர்.

மழை வேண்டல் வழிபாடும் மழையும்

இந்த நூற்றாண்டிலேயே இதுவரை கண்டிராத வறட்சி இவ்வாண்டு தமிழ் நாட்டை ஆட்டிப் படைத்தது. மழை வேண்டல் வழிபாட்டைச் சைவசித்தாந்த சங்கம் 9-3-75இல் நடத்தியது. அதற்கு முன்பு முசுலிம் பெருமக்கள் 'மழைத் தொழுகை' நடத்தினர். பின்பு தமிழ் நாடு தெய்விகப் பேரவையும் பெரு வழிபாட்டைச் சென்னைக் கடற்கரையில் நடத்தியது. தமிழகத்தின் எல்லாக் கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அப்போதே தமிழகத்தின் பிற பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. தலைநகரான சென்னையில் மட்டும் கடந்த பத்து நாட்களாக அவ்வப்போது மழை பெய்கிறது. ஒருசில ஆண்டுகளில் சூன் திங்களில் வழக்கமாகச் சென்னையில் பெய்யும் மழையைக் காட்டிலும் இவ்வாண்டு இரண்டு மடங்கு மழை பெய்துள்ளதாக வானியல் அலுவலகத்தார் கூறுகின்றனர். இருந்தும் சென்னையில் குடிநீர் இன்னும் தேவையான அளவு கிடைக்கவில்லை. நம் அனைவருடைய வழிபாட்டையும் ஏற்றுக் கொண்ட இறைவன் பருவ காலத்திற்கு முன்னரே மழையைப் பொழிவித்ததைப்போல மேலும் மழை பொழியச் செய்து நம் இன்னல்களைக் களைய வேண்டும்.

தவத்திரு குன்றக்குடியடிகளாரின் 50ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா

துறவு நெறியில் நின்றாலும் தமிழ்ப்பற்றை விடாது பெரும்பணி ஆற்றிவரும் சைவத் திருமடத்தின் தலைவர், சைவத்தையும் தமிழையும் நம்மிரு கண்களெனப் போற்றி வரும் தவத்திரு. குன்றக்குடி யடிகளாரின் 50 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா 29-6-75 அன்று திருச்சியில் திருக்குறள் பேரவையினரால் கொண்டாடப் பெற்றது. பெருமக்கள் பலர் அடிகளாரின் அரும்பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

வரலாற்றுப் பேரறிஞர் க. அ. நீலகண்ட சாத்திரியார் மறைவு

இந்திய வரலாறு என்றால் வட இந்திய வரலாறுதான் என்று மேலை நாட்டினர் கருதிக் கொண்டிருந்த வேளையில், தென்னிந்திய வரலாற்றை, குறிப்பாகத் தமிழகத்தின் வரலாற்றை விரிவாக எழுதிப் புகழ்பெற்ற வரலாற்றுப் பேரறிஞர் திரு. க. அ. நீலகண்ட சாத்திரியார் அவர்கள் 15-6-75 இல், தமது 83 ஆம் அகவையில் சென்னை மயிலையிலுள்ள தம நில்லத்தில் காலமானார் என்ற செய்தியறிந்து வருந்துகின்றோம்.

இவருடைய நூல்களில் ஒருசார்புடைய கருத்துகள் சில காணப் படினும், வரலாற்றுத்துறையில் இவர் மேற்கொண்ட பணிகள் போற்றற்குரியன.

இவர் 1913 இல் திருநெல்வேலி 'இந்துக் கல்லூரியில் பேராசிரிய ராகப் பணியேற்று 5 ஆண்டுகள் பணியாற்றியபின் காசிப் பல்கலைக் கழகத்தில் 2 ஆண்டுகள் பணியாற்றினர். 1920 இல், இந்நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக விளங்கும் அந்நாள் சிதம்பரம் மீனாட்சிக் கல்லூரியின் முதல்வராகிப் பின்னர் 1929 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறை, தொல் பொருள் ஆய்வுத் துறை ஆகியவற்றின் பேராசிரியராக 1947 ஆம் ஆண்டுவரை பணியாற்றி ஓய்வு பெற்றார்.

1952 முதல் 1956 வரை மைசூர் பல்கலைக் கழகத்திலும், 1957 முதல் 1971 வரை தென் கிழக்காசிய பண்பாட்டுத் துறை ஆய்வு நிலையத்திலும் பணியாற்றினர். சோழர் வரலாறு, பாண்டியர் அரசுகள், தென்னிந்திய வரலாறு, தமிழகத்தைப் பற்றிய மேனாட்டார் குறிப்புகள் ஆகியன இவர் இயற்றிய நூல்களுள் சிறந்தனவாகும்.

வரலாற்றுத் துறையில் இவர் தம் சிறப்பு குறித்து இந்திய அரசினர் 1958 இல் இவருக்கு 'பத்ம பூடணம்' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினர். இத்தகைய பேராசிரியரின் மறைவு வரலாற்றுத் துறைக்குப் பேரிழப்பாகும். மறைந்த பேராசிரியரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குழந்தை எழுத்தாளர் திரு. நாக. முத்தையா மறைவு

குழந்தைகளுக்கு எளிய நடையில் கதை, கவிதை, அறிவியல் செய்திகள் ஆகியவற்றை நூல் வடிவில் படைத்துள்ள திரு. நாக. முத்தையா 16-6-75 இல் திடீரென நெஞ்சடைப்பினால் காலமானர். 70க்கு மேற்பட்ட நூல்களை எழுதி, இந்திய அரசின் பரிசையும், யுனெஸ்கோ பரிசையும் பெற்றுள்ள இவர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பொறுப்புள்ள பணியில் இருந்து வந்தார். தம் 46 ஆவது

அகவையில் இவர் மறைந்தது, தமிழ்நாட்டுக்கும் தமிழ்க் குழந்தைகள் இலக்கியத்திற்கும் பேரிழப்பாகும்.

திரு. க. சோமசுந்தரம் பிரிவு

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளரான திரு. க. சோமசுந்தரம் 3-7-75 இல் மாரடைப்பால் மறைந்தது தமிழ் எழுத்தாளர் உலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அச் சங்கத்தைத் தோற்றுவிக்கத் துணையாயிருந்து இதுநாள் வரை அதைச் சிறப்பாக நடத்தி வந்தவர் அவர். அவர் சிறந்த எழுத்தாளரும் ஆவர். ஆறுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். 'தமிழ் உறவு' என்ற இதழைக் கடந்த சில ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வந்தவர்.

டாக்டர் மோசூர் வாசுகி அம்மையாரின் மலேயாச் செலவு

தமிழ்ப் பெரும் புலவர் மோசூர் கந்தசாமி முதலியாரின் திருமகளாரான டாக்டர். வாசுகி எம். ஏ., பி எச். டி. தில்லிப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மிராண்டா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்கிறார். மே திங்களில் அவர் மலேயா நாட்டிற்குச் சென்று ஒரு திங்கள் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். அவருக்குக் கோலாலம்பூர் எழுத்தாளர்கள் சிறப்பு வரவேற்பு அளித்தனர்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு

தமிழகத்திலுள்ள பல புலவர் கல்லூரிகளில் சென்னை, மதுரைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டத் தேர்வு வகைக்குப் பயின்றுவரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இச் சங்கத்தார் நடத்தி வரும் தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வில் இவ்வாண்டு (1975 பிப்ரவரியில்) நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், பரிசு பெற்றவர்கள் விபரம்.

வித்துவான் முதனிலை

1. 1001. எஸ். வசந்தா, பல்கலைக் கல்லூரி,
   தருமபுரம். முதற் பரிசு ரூ. 40
2. 1076. க. முருகேசன், இராமசாமி தமிழ்க்கல்லூரி,
   காரைக்குடி. 2ம் பரிசு ரூ. 30
3. 1007. ச. ந. தட்சிணாமூர்த்தி, கரந்தைப் புலவர் கல்லூரி,
   கரந்தை. 3ம் பரிசு ரூ. 20.

வித்துவான் இறுதிநிலை

1. 748. கிருஷ்ணமூர்த்தி. செந்தமிழ்க் கல்லூரி,
   திருப்பனந்தாள், முதற்பரிசு ரூ. 50.
2. 894. மரியவியாகுலம், இளங்கோ தமிழ்க் கல்லூரி,
   பெருமாள்புரம், 2ம் பரிசு ரூ. 35.
3. 874. லெ. காந்திமதி. இராமசாமி தமிழ்க் கல்லூரி,
   காரைக்குடி. 3ம் பரிசு ரூ. 25.

குறிப்பு :—மொத்தம் முதனிலை தேர்வில் முதல் வகுப்பில் ஒருவரும், 2வது வகுப்பில் 17 மாணவர்களும், 3வது வகுப்பில் 104 மாணவர்களும், இறுதிநிலையில் முதல் வகுப்பில் 10 மாணவர்களும், 2வது வகுப்பில் 33 மாணவர்களும், 3வது வகுப்பில் 85 மாணவர்களும் தேர்வு பெற்றுள்ளனர்.

மதிப்புரை

தமிழில் விடுகதைகள்

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20. விலை: ரூ. 10-00.

ஆங்கிலத்தில் 'புதிர்வினா' நிகழ்ச்சிகள் நிரம்ப நடக்கின்றன. அவற்றில் அறிவுக்கு மட்டுமே வேலை. இலக்கிய வளர்ச்சிக்கு அவை எவ்வகையிலும் பயன்படுவதில்லை. தமிழில் உள்ள விடுகதைகள் அறிவுக்கும் வேலை தரும். இலக்கிய வளர்ச்சிக்கும் ஆக்கம் தரும். தமிழ் விடுகதைகளில் உள்ள கற்பனை வளமும் சொல்லாட்சியும் தொடரமைப்பும் சிறந்த புலவனின் படைப்புக்கு ஈடானவை. ஆனால், அவை வாய்மொழி இலக்கியமாகவே வழங்கி வருவதால் படைப்பிலக்கியத்திற்கு இணையான இடத்தைப் பெறமுடியாது போயிற்று. அவ் விலக்கியத்தை டாக்டர். ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் தேடிப் பிடித்துத் திரட்டியெடுத்து வடிகட்டிப் புதுமெருகு ஊட்டி ஏட்டில் எழுதி நமக்கு இந்நூல் வடிவில் வழங்கியுள்ளார். இதுவரை ஒரு சில நூல்களே இத் துறையில் வந்துள்ளன. அவையும் ஒரு சில விடுகதைகளையே தொகுத்துக் கொடுத்துள்ளன. முதன் முறையாகப் பெரிய அளவில் விடுகதைகளைத் தொகுத்தளித்துள்ள இவர் முயற்சி பாராட்டி வரவேற்கத்தக்கது.

நூலுக்கு முன்னணியாகத் திகழ்வது தொகுப்பாசிரியரின் 64 பக்க ஆய்வுரை. விடுகதை இலக்கியத்தின் சிறப்பை அவர் பல கோணங்களிலிருந்து பார்த்து, மிகத் திறம்பட எழுதியுள்ளார். மெல்ல மறைந்து வரும் தமிழ் விடுகதை இலக்கியத்திற்குப் புத்துயிர் அளிக்கும் இவர் முயற்சியை வரவேற்கிறோம்.

'Tamil Research through Journals'

திரு அ. அ. மணவாளன், எம். ஏ., உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20. விலை: ரூ. 7-50.

தமிழ் ஆய்வு தலையெடுத்து ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு இணங்க அது வளர்ந்து வரும் இந்நாளில் அவ் ஆய்வுக்கு வேண்டியவை இந்நூலைப் போன்ற சிறந்த கருவி நூல்களேயாகும். தமிழாய்வு என்பது இன்று தமிழ்நாட்டில் மட்டும் நடைபெறுவதன்று. அமெரிக்கா, இங்கிலாந்து, ருசியா போன்ற மேனாட்டு அறிஞர்களும் இன்று தமிழாய்வில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தமிழியல் பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள கட்டுரைகளைப் பற்றி அறிந்து கொள்ளத் துடிக்கின்றனர். அவர்கட்கு மட்டுமன்றித் தமிழாய்வில் ஈடுபட்டுள்ள எல்லார்க்குமே பயன்படக் கூடிய வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

'Siddhanta Dipika' 'Tamilian Antiquary' 'Tamil Culture' 'Journal of Tamil Studies' ஆகிய இதழ்கள் தமிழாய்வுக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளன. அவற்றில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தையும் இந் நூலாசிரியரான திரு அ. அ. மணவாளன் அவர்கள் பெரு முயற்சியெடுத்து, நீண்ட நேரம் செலவிட்டுப் பொறுமையாகப் படித்து அவற்றைப் பற்றிய சுருக்கக் குறிப்புகளை இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளார். இந்நூல் மேற்குறிப்பிட்ட இதழ்களில் வெளி வந்துள்ள கட்டுரைகளின் பட்டியலேயாகும். அவற்றை வகைப்படுத்தி முறை செய்து ஆராய்ச்சியாளர்க்கு எளிதில் பயன்படும் வகையில் கொடுத்துள்ளார். இவர் முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

சு. அ. இராமசாமிப் புலவர் எழுதியவை

தமிழ் நாட்டுக் கவிஞர்கள் ஐவர்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிஞர் மாஸ்கரேனஸ் ஆகியோர் வரலாறுகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளன. **ரூ. 2—50.**

இளைஞர்க்கான கந்தபுராணக் கதை

முருகப் பெருமானின் பிறப்பு, சூரபன்மனுடன் அவர் செய்த போர், தெய்வயானை, வள்ளியம்மையார் திருமணங்கள் ஆகியன சுவைபடக் கூறப்பட்டுள்ளன. **ரூ. 3—50.**

இசுலாமியக் கதைகள்

நன்னெறி புகட்டும் இசுலாமியக் கதைகள் சிலவற்றின் தொகுப்பே இந்நூல். மாணவர்கள் படித்துப் பண்பும் பயனும் பெறத் தக்கவை. **ரூ. 2—50.**

பேராசிரியர் மா. பா. குருசாமி, எம். ஏ., டி. ஜி. டி.
எழுதியுள்ள புதிய நூல்கள்

பொது நிதியின் கதை	(Story of Public Finance)	1—75.
மக்கட் பெருக்கத்தின் கதை	(Story of Population)	1—75.
அயல் நாட்டுச் செலாவணி	(Foreign Exchange)	1—75.

என். கே. வேலன், பி. ஏ.

அறிவியல் மேதைகள் நால்வர்	2—00.
தமிழ்நாட்டு மேதைகள் ஐவர்	2—25.

புலவர் இரா. இளங்குமரன்

பாண்டி நாட்டுப் புலவர்கள்	(முதற் புத்தகம்)	2—25.
,, ,,	(இரண்டாம் புத்தகம்)	2—25.
சங்கச் சான்றோர் அறிவுரை		1—75.
சங்கச் சான்றோர் அருளுரை		1—75

குறிப்பு:—பள்ளி மாணவர்கட்கென்றே அறிஞர் பலரால் எழுதப் பெற்றுள்ள சீரிய நூல்கள் பற்றிய விவரம் அடங்கிய நூற் பட்டியலைக் கழகக் கிளை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

நெஞ்சுக்கு நீதி—டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி (டாக்டர் கலைஞர் அவர்களின் அரிய வரலாறு)		40	00
சங்க இலக்கியத்தில் பாடாண் திணை	—என். ஜெயராமன்	15	00
உறவுகள் முடிவதில்லை	—சி. ஆர். ராஜம்மா	9	00
இனியது இனியது இளமை	—பி.எல்.ராஜேந்திரன்	7	50
புழுதியிலே புதுமலர்	—நாகை. தருமன்	8	00
இளங்கோவின் பாத்திரப்படைப்பு	—எஸ். ராமகிருஷ்ணன்	6	00
அறவிளக்கு	—சிவகுருநாதன்	4	50
தொல்காப்பியர்	—ப. அருணாசலம்	8	00
தமிழ் இதழ்கள்	—சோமலெ	16	00
எங்கள் பயணங்கள்	—சாலை இளந்திரையன்	6	00
உரை வீச்சு	— ,,	5	00
விலங்குகள்	—ராஜம் கிருஷ்ணன்	4	75
குருதிப் புனல்	—இந்திரா பார்த்தசாரதி	7	00
நேர்கோடுகள்	—சாமி. மூர்த்தி	3	75
சோவியத் நாட்டில்	—அகிலன்	3	50
அபிநயம்	—க. ப. அறவாணன்	9	00
பனித்துளிகள்	—முருகு சுந்தரம்	6	00
கட்டில் வீணை	—கவிஞர் புதுமைவாணன்	6	00
ராஜபீடம்	—கௌதம நீலாம்பரன்	6	00
தென்னங்கீற்று	—கோவி. மணிசேகரன்	6	00
குடவாயில் கோட்டம்	— ,,	8	00
நவராத்திரி நாயகி	—ரா. கணபதி	20	00
புனலும் மணலும்	—ஆ. மாதவன்	7	50
நேற்றிருந்தோம்	—கிருத்திகா	9	50
நாய்கள்	—நகுலன்	9	50
உவகைப் பூ	—வே. கபிலன்	10	00
நாக நந்தினி	— ,,	5	00
இருபதில் சிறுகதைகள்	—தா. எ. பியூலாமெர்சி	6	00

அப்பர் அச்சகம், சென்னை - 1.